



# தின பூமி

thinaboomi.com

நெல்லை, ஞாயிறு, டிசம்பர் 03, 2023 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00








**இடிந்து விழும் அபாயத்தில் இத்தாலி சாய்ந்த கோபுரம்: பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்**

...2-ம் பக்கம்

**சபரிமலை ஐயப்பன் கோவிலில் பக்தர்கள் வருகை அதிகரிப்பு: ஒரேநாளில் 1 லட்சம் பேர் தரிசனம்**

...3-ம் பக்கம்

**கிராண்ட் மாஸ்டர் பட்டம்: தமிழக செஸ் வீராங்கனை வைஷாலி புதிய சாதனை**

...7-ம் பக்கம்





மத்தியப்பிரதேச மாநிலத்தில் சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படவுள்ளதை முன்னிட்டு இந்தூரில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தை தேர்தல் ஆணைய ஊழியர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

### இன்று உருவாகும் மிக்ஜம் புயலால் சென்னை உள்ளிட்ட

# 7 மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கை

சென்னை, டிச. 03-

இன்று உருவாகும் மிக்ஜம் புயலால் சென்னை உள்ளிட்ட 7 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மிக்ஜம் புயல் நாளை அதிகாலை கரையை கடக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில், மிக்ஜம் புயல் டிச.5-ம் தேதி முற்பகலில் கரையை கடக்கும் என்றும், தற்பொழுது சென்னையிலிருந்து 450 கிலோ மீட்டர் தொலைவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும் தெரிவித்துள்ளது. தென் கிழக்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள மிக்ஜம் புயலானது மணிக்கு 18 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. இது நாளை புயலாக வலுப்பெற்று 5-ம் தேதி கரையைக் கடக்கிறது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் விரிவான பதிவில், வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள 'மிக்ஜம்' புயல் டிச. 5-ஆம் தேதி முற்பகல் ஆந்திர மாநிலம் நெல்லூர் -மசூலிப்பட்டினம் இடையே கரையைக் கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். இன்று (ஞாயிறு - டிச. 3) கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களிலும் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களிலும் கன முதல் மிக கனமழை பெய்யும். இந்த மாவட்டங்களுக்கு மிக பலத்த மழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், ராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (டிசம்பர் 4-ம் தேதி) திங்களன்று, வட தமிழகத்தில் அநேக இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் காரணமாக ஞாயிறு மற்றும் திங்கள் கிழமைகளில் பலத்த தரைக் காற்று வீசக்கூடும். ஞாயிறன்று மணிக்கு 50 முதல் 60 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். திங்கள் கிழமை மணிக்கு 60 முதல் 70 கி.மீ. வேகத்தில் வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### 142 ரெயில்கள் ரத்து

'மிக்ஜம்' புயல் வரும் 4-ம் தேதி வட தமிழக கடலோர பகுதிக்கு நகர்ந்து 5-ம் தேதி நெல்லூர்-மசூலிப்பட்டினம் இடையே கரையை கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கும் இன்று மிக கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த நிலையில் மிக்ஜம் புயல் எச்சரிக்கை காரணமாக நாடு முழுவதும் 142 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இன்று முதல் 7-ம் தேதி வரை பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும் ரெயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

### சட்டசபை தேர்தல்: ம.பி.-தெலுங்கானா உள்ளிட்ட

# 4 மாநிலங்களில் இன்று வாக்கு எண்ணிக்கை

### மிசோரமில் நாளை தேர்தல் முடிவு வெளியாகிறது

புதுடெல்லி, டிச.03-

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தெலங்கானா, சத்தீஸ்கர் ஆகிய 4 மாநில பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் இன்று (ஞாயிற்றுக்கிழமை - டிச. 3) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. மிசோரமில் மட்டும் நாளை வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

**5 மாநிலத் தேர்தல்...**

2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்னோட்டமாக கருதப்படுவதால், 5 மாநிலத் தேர்தல் முடிவுகள் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. மிசோரமில் மொத்தமுள்ள 40 தொகுதிகளுக்கும், சத்தீஸ்கரில் முதல்கட்டமாக 20 தொகுதிகளுக்கும் நவம்பர் 7-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. சத்தீஸ்கரில் 2வது மற்றும் இறுதிக் கட்டமாக 70 தொகுதிகள் மற்றும் மத்திய பிரதேசத்தின் 230 தொகுதிகளுக்கு நவ. 17-ம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

**வாக்குப்பதிவு...**

ராஜஸ்தானில் 199 தொகுதிகளுக்கு நவ. 25-ம் தேதியும், தெலங்கானாவில் 119 தொகுதிகளுக்கு நவ. 30-ம் தேதியும் தேர்தல் நடைபெற்று முடிந்தது. 5 மாநிலங்களிலும் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 16 கோடியாகும். மிசோரமில் 77.04 சதவீதம், சத்தீஸ்கரில் 76.31 சதவீதம், மத்திய பிரதேசத்தில் 76.22 சதவீதம், ராஜஸ்தானில் 73.92 சதவீதம், தெலங்கானாவில் 70.60 சதவீதம் வாக்குகள் பதிவாகின.

**மும்முனைப் போட்டி...**

மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் தேர்தல் களமானது, பா.ஜ.க. - காங்கிரஸ் இடையிலான பலப்பரீட்சையாக கருதப்படுகிறது. மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க.வும், ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கரில் காங்கிரசும் ஆளுங்கட்சியாக உள்ளன. தெலங்கானாவில் ஆளும் பாரத ராஷ்டிர சமிதி, காங்கிரஸ், பா.ஜ.க. என மும்முனைப் போட்டி காணப்பட்டது. மிசோரமில் ஆளும் மிஸோ தேசிய முன்னணி, பிராந்திய கட்சியான ஜோரம் மக்கள் இயக்கம், காங்கிரஸ், பா.ஜ.க. என பல முனைப் போட்டி நிலவியது.

**வாக்குக் கணிப்பு...**

தேர்தலுக்குப் பிந்தைய வாக்குக் கணிப்பு முடிவுகளின்படி, ராஜஸ்தானில் காங்கிரஸை வீழ்த்தி பா.ஜ.க. ஆட்சி அதிகாரத்துக்கு வர வாய்ப்புள்ளது. மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க.வும், சத்தீஸ்கரில் காங்கிரசும் ஆட்சியைத் தக்க வைக்கும். தென் மாநிலமான தெலங்கானாவில் காங்கிரசுக்கு வெற்றிவாய்ப்பு உள்ளதாகவும், மிசோரமில் தொங்கு பேரவை அமையக் கூடும் என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இன்று வாக்கு எண்ணிக்கையையொட்டி, 4 மாநிலங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மக்கள் கோரிக்கை...**

வடகிழக்கு மாநிலமான மிசோரமில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக் கிழமை புனிதமான நாளாக கருதப்படுவதாலும், அன்றைய தினம் பெருமளவில் மக்கள் தேவாலயங்களுக்குச் செல்வர் என்பதாலும் வாக்கு எண்ணிக்கை தேதியை மாற்ற வேண்டும் என்று தேவாலயங்கள், சமூக அமைப்புகள், அரசியல் கட்சியினர் எனப் பல்வேறு தரப்பில் இருந்து தேர்தல் ஆணையத்துக்கு தொடர்ந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

**நாளை மிசோரமில்...**

இக்கோரிக்கையை முன்வைத்து, மிசோரம் முழுவதும் வெள்ளிக்கிழமை போராட்டங்கள் நடைபெற்ற நிலையில், அங்கு வாக்கு எண்ணிக்கை தேதி கடைசி நேரத்தில் மாற்றப்பட்டுள்ளது. அதன்படி மிசோரம் மாநிலத்திலும் இன்று நடைபெறவிருந்த வாக்கு எண்ணிக்கை, பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அங்கு நாளை (திங்கள்கிழமை - டிச. 4) வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

### பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்:

# சுமூகமாக நடத்துவது குறித்து 23 கட்சிகள் கூடி ஆலோசனை

புதுடெல்லி, டிச. 03-

பாராளுமன்றக் குளிர்கால கூட்டத் தொடர் நாளை கூடவுள்ள நிலையில், நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில் கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி தலைமையில் பாராளுமன்ற நூலகக் கட்டிடத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இதில் கலந்து கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில், 23 கட்சிகளைச் சேர்ந்த 30 தலைவர்கள் கலந்து கொண்டதாக பிரகலாத் ஜோஷி தெரிவித்தார். டிசம்பர் 22-ம் தேதி வரை நடைபெற உள்ள குளிர் கால கூட்டத் தொடரில் மொத்தம் 15 அமர்வுகள் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஜெய்ராம் ரமேஷ், பிரமோத் திவாரி ஆகியோர் கலந்து கொண்டனர். வழக்கமாக பாராளுமன்றக் கூட்டத் தொடருக்கு முதல்நாள் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும். ஆனால், இனறு 4 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ளதால் ஒரு நாள் முன்னதாக நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. வருகிற பாராளுமன்றக் குளிர்கால கூட்டத் தொடரில் தேர்தல் முடிவுகள் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்துக்கட்சி கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரமோத் திவாரி, "தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை நம்ப முடியாது. சில கருத்துக் கணிப்புகள் வேறு மாதிரியாக இருக்கின்றன. ஆனால், நாங்கள் எங்கள் தொண்டர்கள் மூலம் கருத்துக்களைக் கேட்டுள்ளோம். சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய 4 மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும். மிசோரத்தில் எங்கள் கூட்டணி ஆட்சி அமைக்கும்" என்று தெரிவித்தார்.

இந்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில், ஐ.பி.சி., சி.ஆர்.பி.சி., ஆவணச் சட்டம் ஆகியவற்றுக்கு மாற்றாக புதிய மூன்று சட்டங்களைக் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், பாராளுமன்றத்தில் கேள்வி கேட்க பணம் பெற்ற வழக்கில் சிக்கி உள்ள திரிணாமூல் காங்கிரஸ் எம்பி மஹூவா மொய்த்ரா தகுதி நீக்கம் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அப்படி ஒரு முடிவு எடுக்கப்படக் கூடாது என காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# புயல் கரையை கடக்கும் வரை மக்கள் வெளியே வரவேண்டாம்: காவல்துறை

சென்னை, டிச. 03-

4 மாவட்டங்களுக்கு இன்று கனமழை எச்சரிக்கை காரணமாக புயல் கரையை கடக்கும் வரை மக்கள் வெளியே வர வேண்டாம் என்று சென்னை காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது மேலும் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் புயலாக வலுப்பெறக்கூடும்.

அதன் பிறகு வட மேற்கு திசையில் நகர்ந்து முற்பகல் தெற்கு ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய வடதமிழக கடலோரப்பகுதிகளில் நிலவக்கூடும். பிறகு கடலோரப்பகுதிகளை ஒட்டி வடக்கு திசையில் நகர்ந்து, வரும் 5-ம் தேதி தெற்கு ஆந்திரா கடற்கரையை நெல்லூருக்கும், மசூலிபட்டினத்திற்கும் இடையே புயலாக கடக்கக்கூடும். இந்த புயல் சின்னத்திற்கு மிக்ஜம் என்று பெயரிடப்பட்டுள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கும் இன்று மிக கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் புயல் கரையை கடந்துவிட்டதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வரும்வரைபொது மக்கள் வெளியே வர வேண்டாம் என சென்னை காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. மேலும் சமூக வலைதளங்களில் புயல் தொடர்பாக பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் பொதுமக்கள் கடற்கரைக்கு செல்ல வேண்டாம் எனவும் காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.

# வளர்ச்சி பயணத்தில் நாட்டில் எந்த ஏழையும் விடுபடக்கூடாது

### உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சு

புதுடெல்லி, டிச. 03-

ஏழைகளின் வளர்ச்சியின் மூலம்தான் இந்தியா வளர்ந்த நாடாக முடியும் என்று தெரிவித்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வளர்ச்சிப் பயணத்தில் நாட்டில் உள்ள எந்த ஏழையும் விடுபடக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

விக்சித் பாரத் சங்கல்ஃப் யாத்திரை நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களின் பலன்கள் இலக்கு வைக்கப்பட்ட அனைத்துப் பயனாளிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் சென்றடைவதை உறுதி செய்வதன் மூலம் அரசின் முதன்மைத் திட்டங்களை நிறைவு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில், விக்சித் பாரத் சங்கல்ஃப் யாத்திரை 2047-ஆம் ஆண்டுக்குள் சுயசார்பு மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கான இயக்கம் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம், கிர் சோமநாத் மாவட்டத்தில் உள்ள சந்துவாவ் என்ற இடத்தில் விக்சித் பாரத் சங்கல்ஃப் யாத்திரை நிகழ்ச்சியில் கிராம மக்களிடம் அவர் உரையாற்றினார். அப்போது, மத்திய அரசின் அனைத்து நலத் திட்டங்களின் பலன்களும் கடைகோடி மக்களையும் சென்றடைவதை உறுதி செய்ய அரசாங்கம் கடுமையாக உழைத்து வருவதாகவும், வளர்ச்சிப் பயணத்தில் நாட்டில் உள்ள எந்த ஏழையும் விடுபடக்கூடாது என்றும் அமித்ஷா கூறினார்.


விக்சித் பாரத் சங்கல்ஃப் யாத்திரை மூலம், நாடு முழுவதும் உள்ள அரசாங்கத்தின் அனைத்து முதன்மைத் திட்டங்களையும் 100 சதவிகிதம் நிறைவு செய்வதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார். மேலும், தொழில் வளர்ச்சியில் ஏழைகளை விட்டுச் சென்றால் நாடு செழிப்பாக இருக்க முடியாது. ஏழைகளின் வளர்ச்சியின் மூலம்தான் இந்தியா வளர்ந்த நாடாகும் இலக்கை அடைய முடியும் என்று அமித்ஷா கூறினார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE ▲ 492.75 பாயிண்ட் 67481.19

NSE ▲ 134.75 பாயிண்ட் 20267.9



**தங்கம்**
1 சவரன் ₹47,320
1 கிராம் ₹5,915



**வெள்ளி**
1 கிலோ ₹83,500
1 கிராம் ₹83.50

**டாலர்** ₹83.22

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# இடிந்து விழும் அபாயத்தில் இத்தாலி சாய்ந்த கோபுரம்

## பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

**போலோக்னா, டிச. 03-**



இத்தாலியில் 900 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த முக்கிய அடையாளமாக திகழும் கரிசெண்டா சாய்ந்த கோபுரம் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தாலியின் போலோக்னா நகரின் முக்கிய அடையாளமாக திகழும் கரிசெண்டா சாய்ந்த கோபுரம் 900 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது. வானளாவ நிமிர்ந்து நின்ற இந்த கோபுரம், கடந்த சில ஆண்டுகளாக, படிப்படியாக சாயத் தொடங்கியது.

இதையடுத்து அறிவியல் ஆய்வுக்குழுவினர் இந்த கோபுரத்தை ஆய்வு செய்தனர். 2019-ம் ஆண்டு முதல் தளத்தை கண்காணித்த அறிவியல் குழுவினர், சமீபத்தில் 27 பக்க அறிக்கையை வெளியிட்டனர்,

அதில், கோபுரத்தின் தன்மை மோசமாக இருப்பதாகவும், இடிந்து விழுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்திருந்தனர். கடந்த அக்டோபர் மாதம் வெளியான சென்சார் அளவீடுகள், இந்த எச்சரிக்கையை மேலும் தீவிரப்படுத்தின.

கோபுரம் மேலும் சாய்ந்ததாலும், செங்கற்களில் ஏற்பட்ட விரிசல் விரிவடைவதாலும் கோபுரத்தின் நாட்கள் எண்ணப்படுகின்றன. கோபுரம் தற்போது 4 டிகிரி கோணத்தில் சாய்ந்துள்ளதாக சி.பி.எஸ். செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இத்தாலியின் மிகவும் பிரபலமான பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் 5 டிகிரி கோணத்தில் சாய்ந்திருக்கிறது. இதை ஒப்பிட்டால் கரிசெண்டா கோபுரத்தின் சாய்வு கோணம் குறைவுதான். ஆனால், கட்டிடத்தின் உறுதித்தன்மை மோசமடைந்துள்ளது. இதனால் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கோபுரம் இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதாக நிபுணர்களின் புதிய அறிக்கை தெரிவிக்கிறது. அதனால், ஒவ்வொரு நிகழ்வையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் என்று நகர செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

கோபுரத்தை சுற்றி வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக கோபுரத்தை சுற்றிலும் வலுவான வேலி அமைக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

கோபுரத்தின் இடிபாடுகளை வெளியில் விழாமல் தடுத்து, சுற்றியுள்ள கட்டிடங்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு வலைகளுடன் கூடிய உலோக வளைவை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

கோபுரம் சரிந்து விழுந்தால் என்ன ஆகுமோ என்ற நிலையில், நாங்கள் செயல்படுகிறோம். ஆனால் அது எப்போது விழும் என்று யாருக்கும் தெரியாது. மூன்று மாதங்கள் ஆகலாம், 10 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள் கூட ஆகலாம்.

விரைவில் கோபுரம் இடிந்து விழும் அபாயம் இருந்திருந்தால் அந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் வெளியேற்றப்பட்டிருப்பார்கள் என நகர செய்தித் தொடர்பாளர் கூறினார்.

# நவம்பர் மாத ஜி.எஸ்.டி. வரி வசூல் ரூ.1.67 லட்சம் கோடி

## கடந்த ஆண்டை விட 15 சதவீதம் உயர்வு

**புதுடெல்லி, டிச. 03-**

கடந்த நவம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.67 லட்சம் கோடியாக உள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 15 சதவீதம் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆண்டுதோறும் ஜி.எஸ்.டி. வசூல் அதிகரித்து வருகிறது. 2017-18-ம் நிதியாண்டில் மாதம் ஒன்றிற்கு சராசரி வசூல் ரூ.ஒரு லட்சம் கோடிக்கு கீழ் இருந்து வந்தது. எனினும், கொரோனா பெருந்தொற்று பரவல் ஏற்பட்ட 2020-21-ம் நிதியாண்டுக்கு பின்னர் விரைவாக வசூல் அதிகரித்து, 2022-23-ம் நிதியாண்டில் சராசரி வசூல் ரூ.1.51 லட்சம் கோடியாக உயர்ந்து உள்ளது.

இந்த நிலையில், கடந்த நவம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.67 லட்சம் கோடியாக உள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. மத்திய நிதி அமைச்சகம் நவம்பர் மாதத்திற்கான ஜி.எஸ்.டி. வசூல் விவரங்களை வெளியிட்டுள்ளது. அதன்படி,

நடப்பு ஆண்டு நவம்பர் மாதத்திற்கான ஜி.எஸ்.டி. வருவாய் ரூ.1 லட்சத்து 67 ஆயிரத்து 929 கோடியாக உள்ளது. கடந்த ஆண்டு இதே நவம்பர் மாதத்தில் ரூ.1.45 லட்சம் கோடி மட்டுமே வசூலாகி இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில், இது 15 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்தில் ரூ.1.5 லட்சம் கோடிக்கு கூடுதலான ஜி.எஸ்.டி. வசூலை, தொடர்ந்து 9-வது மாதமாக ஈட்டி சாதனை படைக்கப்பட்டு உள்ளது. கடந்த அக்டோபர் மாதம் வசூலான ரூ.1.72 லட்சம் கோடியுடன் ஒப்பிடுகையில், நவம்பர் மாத வசூல் குறைவு ஆகும். 2023-24-ம் நிதியாண்டில் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் 6-வது முறையாக ரூ.1.60 லட்சம் கோடியைக் கடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மியாட் மருத்துவமனையில்

# விஜயகாந்த் குடும்பத்தினரிடம் நலம் விசாரித்தார் நடிகர் நாசர்

**சென்னை, டிச.03-**



சென்னை மியாட் மருத்துவமனையில் விஜயகாந்த் குடும்பத்தினரிடம் நடிகர் நாசர் நேற்று நலம் விசாரித்தார்.

80-களில் பிரபல நடிகராக வலம் வந்தவர் விஜயகாந்த். வித்தியாசமான கதைக்களத்தை தேர்ந்தெடுத்து ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்த இவர் 100-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவர் நடிப்பதோடு மட்டுமல்லாமல் அரசியலிலும் ஈடுபட்டு வருகிறார். நடிகர் விஜயகாந்த் கடந்த சில நாட்களாக உடல் நிலை சரியில்லாமல் சிகிச்சை எடுத்து வந்தார். இதையடுத்து அவருக்கு 14 நாட்கள் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது என்று மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டிருந்தது. இதையடுத்து விஜயகாந்துக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு தொடர் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூச்சு விடுவதற்கு விஜயகாந்த் சிரமப்பட்டு வருவதால் அவருக்கு மூக்கு வழியாக செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டதாகவும் அதில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் தகவல் வெளியானது. மேலும், விஜயகாந்துக்கு தொண்டையில் சிறிய ஆபரேஷன் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையி தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவரும், நடிகருமான நாசர் மற்றும் பெப்சி நிறுவனத்தின் தலைவரான ஆர்.கே.செல்வமணி இருவரும் நேற்று விஜயகாந்தை நேரில் சந்திக்க மருத்துவமனைக்கு சென்றுள்ளனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் விஜயகாந்தை வெளியில் இருந்து பார்த்த இவர்கள், விஜயகாந்தின் குடும்பத்தாரிடம் நலம் விசாரித்துள்ளனர். அப்போது அவர்கள் விஜயகாந்த் கூடிய விரைவில் குணமடைவார் எனவும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

இந்நிலையில், விஜயகாந்த் நலமுடன் இருப்பதாக நடிகர் சங்க தலைவர் நாசர் கூறியுள்ளார். பத்திரிகையாளர்களை சந்தித்த நாசர், விஜயகாந்த் நன்றாக இருக்கிறார். சில நாட்களாக வந்து கொண்டிருக்கும் செய்தி மிகைப்படுத்தின செய்தி. நாங்கள் தலைமை மருத்துவரை பார்த்தோம். அவர் மிகவும் தெளிவாக விஜயகாந்த் வருவார் உங்களை பார்ப்பார்' என்று சொல்லி விட்டார். அதனால் தயவு செய்து மிகைப்படுத்தின செய்திகளை பரப்பாதீர்கள். இவ்வாறு நாசர் கூறினார்.

# மெட்ரோ ரயிலில் இன்று ரூ.5-க்கு பயணிக்கலாம்

**சென்னை, டிச. 03-**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், பல்வேறு சிறப்பு சலுகைகளை அறிவித்து வருகிறது. இதன் ஒருபகுதியாக, மெட்ரோ ரயில்வே நிறுவனம் தொடங்கப்பட்ட நாளை முன்னிட்டு டிஜிட்டல் பயணச்சீட்டு முறையை ஊக்குவிக்கவும், பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், சிறப்புக் கட்டண சலுகையை மெட்ரோ நிர்வாகம் வழங்கியுள்ளது. மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்கள் இன்று 3-ம் தேதி கியூஆர் குறியீடு மூலம் ரூ.5 செலுத்தி பயணச்சீட்டுகள் பெற்று ஒருவழிப்பாதைப் பயணத்தை மேற்கொள்ளலாம். இந்த பிரத்யேகக் கட்டணம் இன்று ஒரு நாள் மட்டுமே செல்லுபடியாகும்.

மேலும் இது இ-கியூ ஆர் குறியீடு மூலம் பெறப்படும் பயணச்சீட்டுகளுக்கு மட்டுமே பொருந்தும். சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பயண அட்டை, சிங்காரச் சென்னை அட்டை, கைப்பேசி செயலி, ஸ்டோர் வேல்யூ பாஸ் மற்றும் காகித க்யூஆர் உள்ளிட்ட முறைகளில் பயணச்சீட்டு பெறுபவர்களுக்கு இச்சலுகை பொருந்தாது என மெட்ரோ நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி மாவட்ட தே.மு.தி.க. சார்பில்

# விஜயகாந்த் பூரண உடல் நலம் பெற வேண்டி சிறப்பு பூஜை

## மாவட்டசெயலாளர் சுரேஸ் பங்கேற்பு



**கோவில்பட்டி டிச 03**

தமிழ் திரைப்படஉலகில் எம்.ஜி.ஆருக்கு அடுத்தபடியாக திரைஉலகில் தன்னுடன் இருப்பவர்களுக்கு உதவிசெய்பவர் என்று சொன்னால் அது நடிகர் விஜயகாந்தையே சாரும். அவர் தன்னுடன் நடித்த நடிகர்களுக்கும்சரி, பொதுமக்களுக்கும்சரி, ஏழ்மையில் உள்ளோருக்கும் சரி, அனைத்து உதவிகளையும் செய்து வந்தார். தற்போது உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் விஜயகாந்த் ரசிகர்கள் கோயில் கோயிலாக சென்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள்.

தமிழகத்தில் முன்னோடியாக தூத்துக்குடி வடக்குமாவட்ட தேமுதிக சார்பில் தூத்துக்குடி மாவட்டத்தில் பிரசித்திபெற்ற திருக்கோயில்களான கோவில்பட்டி அருள்மிகு செண்பகவள்ளிஅம்மன் உடனுறை பூவனாதசாமி திருக்கோயில், கழுகுமலை கழுகாசலமூர்த்தி திருக்கோயில், கயத்தார் அகிலாண்டஈஸ்வரி திருக்கோயில், காமநாயக்கன்பட்டி பரலோக மாதா திருக்கோயில், தூத்துக்குடி பனிமயமாதா திருக்கோயில், ஆகியவற்றில் தூத்துக்குடி வடக்கு மாவட்டசெயலாளர் சுரேஸ் தலைமையில் தினமும் ஐந்து கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

கயத்தார் அகிலாண்டேஸ்வரி சமேத கோதண்டராமேஸ்வரர் ஆலயத்தில் மாவட்டசெயலாளர் சுரேஸ் தலைமையில் சிறப்புபூஜை மற்றும் ஆராதனை நடைபெற்றது. மாவட்ட அவைதலைவர் கொம்பையாபாண்டியன், கயத்தார் ஒன்றியசெயலாளர் அருண், கோவில்பட்டி நகரசெயலாளர் நேதாஜிபாலமுருகன், கோவில்பட்டி ஒன்றியசெயலாளர் பெருமாள்சாமி, கயத்தார் நகரசெயலாளர் கண்ணண், மாவட்ட மகளீரணிசெயலாளர் வெண்ணிலா, முன்னாள் மாவட்டநிர்வாகி முத்துமாலை, அருணாச்சலம், விஜய், மதிமுத்து, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# இளம் வாக்காளர்கள் குறித்த சர்ச்சை பேச்சு: விவேக் ராமசாமிக்கு வலுக்கும் எதிர்ப்பு

**வாஷிங்டன், டிச. 03-**

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் விவேக் ராமசாமி முதன்முறை மற்றும் இளம் வாக்காளர்கள் குறித்து பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அவரது கருத்துக்கு கருப்பின பிரதிநிதிகள் இடையே பலத்த எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

அமெரிக்காவில் அடுத்த வருடம் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய அதிபர் ஜோபைடனை எதிர்த்து முன்னாள் அதிபர் டிரம்ப் தீவிரமாக களம் இறங்கி உள்ளார். ஆனால், டிரம்ப் மீதுள்ள பல்வேறு வழக்குகளில் வரப்போகும் தீர்ப்பினை பொறுத்தே அவரது அரசியல் எதிர்காலம் அமையும் நிலை உள்ளது.

இதனால் குடியரசு கட்சி வேட்பாளர்களில் டிரம்பிற்கு அடுத்த நிலையில் அதிக ஆதரவு உள்ள இந்திய வம்சாவளி தொழிலதிபர் விவேக் ராமசாமி ஆதரவு கோரி பிரசாரம் செய்து வருகிறார். பல்வேறு நகரங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் அமெரிக்காவை சூழ்ந்துள்ள சிக்கல்கள் குறித்தும் அவற்றிற்கான தீர்வுகள் குறித்தும் விவேக் ராமசாமி பேசி வருகிறார்.

முதன்முறை மற்றும் இளம் வாக்காளர்கள் குறித்து பேசிய கருத்து ஒன்று சர்ச்சையை கிளப்பியுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தின்படி 18 வயது நிறைவடைந்தவர்கள் தேர்தல்களில் வாக்களிக்க தகுதி பெறுகிறார்கள். ஆனால், விவேக் ராமசாமி முன்மொழிந்துள்ள மாற்று திட்டத்தின்படி, 18 வயதை எட்டியவர்கள் தேர்தலில் வாக்களிக்க அடிப்படை பொது அறிவிற்கான ஒரு தேர்வை எழுதி வெற்றி பெற வேண்டும் அல்லது 6 மாதங்கள் ராணுவத்தில் பணியாற்றி இருக்க வேண்டும் அல்லது முதல்நிலை அவசர சேவை பணியாளர்களாக சில காலங்கள் பணியாற்றி இருக்க வேண்டும்.

தனது இந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ள விவேக், வாக்களிக்க விரும்பும் இளைஞர்களுக்கு அடிப்படை பொது அறிவு அவசியம் என கூறுகிறார். தான் வென்றால் இதற்கான அரசியலமைப்பு சட்ட மாறுதல்களை கொண்டு வர உத்தேசித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விவேக்கின் இந்த கருத்திற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இது கருப்பினத்தவர்களுக்கான வாக்களிக்கும் உரிமையை பறிக்கும் முயற்சி என்றும் பல்வேறு பயனற்ற மற்றும் பதில் தெரியாத கேள்விகள் கேட்கப்பட்டு அவற்றிற்கு பதிலளிக்க முடியாததால், வாக்குரிமை இழக்கும் அபாயம் தோன்றும் என கருத்து தெரிவிக்கும் கருப்பின பிரதிநிதிகள், கல்வியையும் வாக்களிக்கும் உரிமையையும் ஒன்றுடன் ஒன்று கலக்க கூடாது என வலியுறுத்தி வருகின்றனர்.

விவேக் ராமசாமி முன்மொழிந்துள்ள மாறுதல்கள் அதிபர் தேர்தலில் அவருக்கும் அவரது குடியரசு கட்சிக்கும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது வரும் நாட்களில்தான் தெரிய வரும் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# இம்ரான்கான் கட்சிக்கு புதிய தலைவர் நியமனம்

**லாகூர், டிச. 03-**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான், பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சித் தலைவராக உள்ளார். அவர் 2018 முதல் ஏப்ரல் 2022 வரையிலான காலகட்டத்தில் அந்நாட்டு பிரதமராக பதவி வகித்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் இம்ரான் கான் கட்சி தோல்வியைச் சந்தித்து ஆட்சி கலைக்கப்பட்டது. பதவி விலகிய அவர்மீது இதுவரை 100-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரதமராக இருந்த போது பரிசுப்பொருள் முறைகேடு வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு கடந்த செப்டம்பர் முதல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதற்கிடையே, இம்ரான் கான் கட்சியின் சின்னமான கிரிக்கெட் மட்டை சின்னத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள 20 நாளுக்குள் புதிய கட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான உள்கட்சித் தேர்தலை நடத்துமாறு பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் கால அவகாசம் வழங்கியது. கடந்த திங்களன்று நடைபெற்ற கட்சி காரியக் கமிட்டி கூட்டத்தில் உள்கட்சித் தேர்தல் நடத்த அதிகாரப்பூர்வ ஒப்புதல் அளிக்கப்பட்டது. வரும் பொதுத் தேர்தலில் கட்சியை வழிநடத்த புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான உள்கட்சி தேர்தல் டிசம்பர் 2-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

பிடிஐ கட்சித் தலைவர் பதவிக்கு இம்ரான் கான் போட்டியிடப் போவதில்லை என்று அக்கட்சித் தலைமை அறிவித்துள்ளது. இந்நிலையில், இம்ரான் கானுக்கு பதிலாக அவருக்கு மிகவும் நெருக்கமானவரான பாரிஸ்டர் கோஹர் கான் கட்சித் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என அக்கட்சி அறிவித்துள்ளது,

# அயோத்தியில் வரும் 15-ம் தேதிக்குள் புதிய விமான நிலையம் தயாராகி விடும்

## உ.பி முதல்வர் யோகி தகவல்

**அயோத்தி, டிச. 03-**

உத்தரப் பிரதேசத்தின் அயோத்தி நகரில் வரும் 15-ம் தேதிக்குள் மிகப் பெரிய விமான நிலையம் தயாராகி விடும் என்று அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யாநாத் தெரிவித்தார்.

அயோத்தியில் சிறிய அளவில் விமான நிலையம் இருந்து வந்த நிலையில், அங்கு தற்போது பெரிய அளவில் விமான நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அடுத்த மாதம் 22-ம் தேதி அயோத்தி ராமர் கோயிலின் சிலை பிரதிஷ்டைப் பணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், அதற்குள் விமான நிலைய விரிவாக்கப் பணிகளை முடிக்க உத்தரப் பிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், விமான விரிவாக்கப் பணிகள் நடைபெறும் இடத்தை உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

அப்போது, அங்கு நடைபெற்று வரும் பணிகள் குறித்து யோகி ஆதித்யாநாத்துக்கு ஜோதிராதித்ய சிந்தியா விளக்கினார். மேலும், பணிகள் நிறைவுற்றதும் விமான நிலையம் எவ்வாறு இருக்கும் என்பது குறித்த வரைபடத்தையும், யோகி ஆதித்யாநாத்துக்கு காட்டினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜோதிராதித்ய சிந்தியா,

நாட்டின் பிற பகுதிகளில் இருந்தோ அல்லது வெளிநாடுகளில் இருந்தோ அயோத்தி வருபவர்கள் நகரின் புராதன சிறப்பை விமான நிலையத்திலேயே அறிந்து கொள்வார்கள். அதற்கேற்ப, விமான நிலையத்தை வடிவமைக்க நாங்கள் முயன்று வருகிறோம் என கூறினார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய யோகி ஆதித்யாநாத், அயோத்தியில் மிகச் சிறிய அளவில் விமான நிலையம் இருந்தது அனைவருக்கும் தெரியும். விமான நிலையத்தை பெரிய அளவில் அமைப்பதற்காக மாநில அரசு 821 ஏக்கர் நிலத்தைக் கொடுத்ததை அடுத்து, மிகப் பெரிய புதிய விமான நிலையத்தை அமைப்பதற்கான பணிகளை இந்திய விமான ஆணையரகம் மேற்கொண்டு வருகிறது. புதிய விமான நிலையம் வரும் 15-ம் தேதிக்குள் தயாராகி விடும் என தெரிவித்தார்.

# வங்கதேசத்தில் கடும் நிலநடுக்கம்: ரிக்டர் அளவுகோலில் 5.6ஆக பதிவு

**கொல்கத்தா, டிச. 03-**

வங்கதேசத்தில் நேற்று காலை 9.05 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இது 5.6 ஆக பதிவாகி உள்ளது. இந்த நிலநடுக்கத்தால் மேற்கு வங்கத்தில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக நில அதிர்வுக்கான தேசிய மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், வங்கதேசத்தில் நிலநடுக்கமும், இந்தியாவில் நில அதிர்வும் ஏற்பட்டுள்ளது. வங்கதேசத்தின் தென் கிழக்கே 55 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.6 ஆக பதிவாகி உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. எனினும், இதனால் சேதம் ஏதும் ஏற்பட்டதாக இதுவரை எந்த தகவலும் வரவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில், இறுதி அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர். கொல்கத்தா காவல் துறை, மாநகராட்சி ஆகியவற்றின் அதிகாரிகள் வெளியிட்டுள்ள தகவலில், நில அதிர்வால் சேதம் ஏதும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# 50 லட்சம் கையெழுத்துகளை கடந்தது நீட் விலக்கு இயக்கம்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்

**சென்னை, டிச. 03-**



நீட் விலக்கை வலியுறுத்தி பெறப்படும் கையொப்பங்கள் இதுவரை 50 லட்சத்தைத் தாண்டி உள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

நீட் விலக்கை வலியுறுத்தி, தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் கையொப்ப இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. 50 லட்சம் கையொப்பங்களை பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த இலக்கு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அதிகரித்து இப்போது 55 லட்சம் ஆகியுள்ளது.

இணையவழியில் 40 லட்சமும், அஞ்சல் அட்டை வழியாக 15 லட்சமும் என 55 லட்சம் கையொப்பங்கள் பெறப்பட்டுள்ளன. தொடர்ந்து, கையொப்பமிட்டு மக்கள் தங்களது நீட் எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறார்கள். நீட் எதிர்ப்புணர்வு தமிழகத்தில் பேரலையாய் திரண்டிருக்கிறது என்பதற்கான சான்று இதுவாகும்.

வரும் 17-ம் தேதி சேலம் இளைஞரணி மாநில மாநாட்டுக்குள் மேலும் பல லட்சம் கையொப்பங்கள் குவிகின்ற வகையில் நாம் தொடர்ந்து செயலாற்றுவோம். ஜனாதிபதியின் ஒற்றை கையொப்பத்தை பெறுவதற்காக நாம் பெறும் இத்தனை லட்சம் கையொப்பங்களும் நீட் ஒழிப்பு வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

தகுதி, தரம் என்று ஏமாற்றி நீட்டைத் திணிப்பவர்கள், அதற்கெதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் எண்ணத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# இன்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, டிச. 03-
இன்று சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு உள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:-

நமது அரசு, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் முதல் நடவடிக்கையாக மாற்றுத்திறனாளிகளின் உடல் ரீதியான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுக்கவும், சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கவும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் பிற நலத்திட்டங்களுக்காகவும் வழங்கப்படும் நிதியினை இந்த அரசு உயர்த்திக் கொண்டே வருகிறது.

இதன்மூலம் மாற்றுத்திறனாளிகளின் சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள் முழு பங்கு வகிக்கும் வகையில் பொதுக் கட்டிடங்களில் தடையற்ற சூழல் அமைத்தல், நவீன உதவி உபகரணங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, இந்த நாளில் மாற்றுத்திறனாளிகளுக்கான நிலையான நீடித்த இலக்குகளை அடைந்திடவும், அவர்களின் நலனை பாதுகாக்கவும் நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம் என அனைவரும் ஒன்றிணைந்து உறுதி ஏற்போம்.

இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

# மழை நேரத்தில் மின் கம்பம் அருகே போக வேண்டாம்

## மக்களுக்கு மின்சார வாரியம் எச்சரிக்கை

சென்னை, டிச. 03-
மிக்ஜாம் புயல் காரணமாக சென்னையில் கனமழை எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், பொது மக்கள் பாதுகாப்பான வழிமுறைகளை கடைபிடிப்பது குறித்து மின்சார வாரியம் சார்பில் வழிகாட்டுதலை வெளியிட்டு உள்ளது.

மின்கசிவு, மின் அதிர்ச்சி தொடர்பான புகார்களுக்கு மின் வாரியத்தின் சேவை மையத்தை உடனே அணுக வேண்டும். மின் கம்பிகள் அறுந்து கிடக்கும் பகுதிகள், கம்பங்கள், பில்லர் பாக்ஸ், டிரான்ஸ்பார்மர் இருக்கும் பகுதிகளுக்கு அருகே செல்ல வேண்டாம். மின் கம்பங்கள் மற்றும் மின் சாதனங்களுக்கு அருகே தேங்கி கிடக்கும் தண்ணீரில் நடப்பதை தவிர்க்க வேண்டும். தாழ்வாக செல்லும் மின் வயர்கள் அருகில் செல்வதையும், தொடுவதையும் தவிர்க்க வேண்டும் எனக்கூறியுள்ளது.

# டாஸ்மாக் கடைகளை மூடுவது தமிழக அரசின் கொள்கை முடிவு

## சென்னை உயர் நீதிமன்றம் கருத்து

சென்னை, டிச. 03-
டாஸ்மாக் கடைகளை மூடுவது தமிழக அரசின் கொள்கை முடிவு என்று தெரிவித்துள்ள சென்னை ஐகோர்ட், மனுதாரர்கள் தங்கள் குறைகளுக்கு அரசை அணுகி நிவாரணம் கோரலாம் என்றும் தெரிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் 500 டாஸ்மாக் கடைகளை மூட டாஸ்மாக் நிர்வாகம் கடந்த ஜூன் 20ந் தேதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்று சென்னை ஐகோர்ட்டில் நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பொதுநலனை கருத்தில் கொண்டு டாஸ்மாக் கடைகளை மூடுவது தொடர்பாக தமிழக அரசு எடுத்த கொள்கை முடிவை எதிர்த்து நில உரிமையாளர்கள் வழக்கு தொடர முடியாது என்றார். மனுதாரர்கள் தங்கள் குறைகளுக்கு அரசை அணுகி நிவாரணம் கோரலாம் என்று கூறிய நீதிபதி, இது சம்பந்தமான முறையீட்டை பரிசீலித்து அரசு முடிவெடுக்கலாம் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து கட்டிட உரிமையாளர்கள் தாக்கல் செய்த வழக்குகளை தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

# 5 மாநிலங்களிலும் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும்: எல்.முருகன் நம்பிக்கை

சென்னை, டிச. 03-
சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற 5 மாநிலங்களிலும் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா, சத்தீஸ்கர் ஆகிய 4 மாநில பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. மிஸோரம் மாநிலத்திலும் இதே நாளில் வாக்கு எண்ணிக்கை நடைபெறவிருந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அங்கு நாளை (டிச.4) வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சமீபத்தில் பேரவைத் தேர்தல் நடைபெற்ற 5 மாநிலங்களிலும் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

சமீபத்தில் பேரவைத் தேர்தல் நடைபெற்ற மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தெலங்கானா, சத்தீஸ்கர், மிஸோரம் ஆகிய ஐந்து மாநிலங்களிலும் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும். மத்தியப் பிரதேசம், ராஜஸ்தானில் ஐந்தாவது முறையாகவும், இந்தியாவின் இளம் மாநிலமும்,தென் மாநிலமான தெலுங்கானாவில் முதல் முறையாகவும் மற்ற அனைத்து மாநிலங்களிலும் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் என்றார்.மிசோரமில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்தார்.

# மக்கள் வரிப்பணத்தில் கார் பந்தயம் நடத்துவது தேவையற்றது: எடப்பாடி

சேலம், டிச. 03-
மக்கள் வரிப்பணத்தில் கார் பந்தயம் நடத்துவது தேவையற்றது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று சேலத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஒருநாள் மழைக்கே சென்னை தண்ணீரில் தத்தளிக்கிறது. முறையாக மழை நீர் வடிகால் பணிகளை தி.மு.க. அரசு நடத்தியிருந்தால் சென்னைக்கு இந்த நிலை ஏற்பட்டு இருக்காது. மழை நீர் தேங்காமல் இருக்க 4 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொண்டதாக தி.மு.க. அரசு கூறியது.

நிதி ஒதுக்காமல் அம்மா உணவகத்தை மூடும் நிலைக்கு கொண்டு வந்த தி.மு.க. அரசு கார்பந்தயத்தை நடத்துகிறது. தீவுத்திடலில் கார் பந்தயம் நடத்த 42 கோடி ரூபாய் செலவு செய்வது கண்டிக்கத்தக்கது. திட்டப் பணிகளுக்கே நிதியில்லை என்று கூறும் அரசு, கார் பந்தய சாலைக்கு நிதி ஒதுக்குகிறது. விளம்பரத்திற்காக மக்கள் வரிப்பணத்தில் கார் பந்தயம் நடத்துவது தேவையற்றது. அமலாக்கத்துறை அதிகாரி குற்றம் செய்து இருந்தால் அவர் கைது செய்யப்பட்டதில் தவறு இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாரதிய ஜனதாவினருக்கு எங்கு சென்றாலும் என் ஞாபகம்தான்

## நீலகிரியில் அமைச்சர் உதயநிதி பேச்சு

ஊட்டி, டிச. 03-
பா.ஜ.க.வினருக்கு எங்கு சென்றாலும் என் ஞாபகம் தான் என்று தெரிவித்துள்ள, திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழக அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிரதமர் மோடி தலைமையிலான அரசு கார்ப்பரேட்களுக்கான ஆட்சி என்று தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகை என்சிஎம்எஸ் மைதானத்தில் திமுக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நேற்று நடந்தது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது: "இந்தியாவிலேயே கட்சியின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிய ஒரே கட்சி திமுக தான். திமுகவில் எத்தனை அணிகள் இருந்தாலும் முதன்மையான அணி இளைஞரணி தான். நாட்டிலேயே இளைஞரணி என்பது முதன் முதலில் திமுகவில்தான் தொடங்கப்பட்டது.

2 மாதங்களுக்கு முன்பு மதுரையில் மாநாடு நடந்தது. ஒரு மாநாடு எப்படி நடக்க கூடாது என்பதற்கு அந்த மாநாடே உதாரணம். மதுரையில் நடந்தது கேலிக்கூத்தான மாநாடு. பா.ஜ.க.வினருக்கு எங்கு சென்றாலும் என் ஞாபகம்தான். என்னைப் பற்றியே பேசி கொண்டிருக்கின்றனர். நான் ஓர் அரங்கத்தில் பேசினேன்.

அதில், பிறப்பால் அனைவரும் சமம் என்று மட்டுமே பேசினேன். ஆனால், நான் பேசாததை பேசியதாக திரித்துக் கூறி வருகின்றனர். எங்கு போனாலும் திமுகவைப் பற்றி பேசுவதே அமித் ஷாவுக்கு வேலையாக உள்ளது. பொய்க் குற்றச்சாட்டுகளை சொல்வதில் அமித் ஷா வல்லவர். அதுபோல பிரதமரும் இதையே பேசி வருகிறார்.

மத்திய அரசு 9 வருடங்களில் செய்த ஊழல்களை சிஏஜி அறிக்கையில் அம்பலமாகிவிட்டது. மத்திய அரசால் பலன் அடைந்தது என்று பார்த்தால் அது அதானி குடும்பம் மட்டுமே. கார்ப்பரேட்களுக்கான ஆட்சியாக பிரதமர் மோடி தலைமையிலான அரசு உள்ளது. 2021 சட்டமன்ற தேர்தல் போன்று, 2024 மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைக்க வேண்டும்" என்று அவர் பேசினார்.

# சபரிமலை ஐயப்பன் கோவிலில் பக்தர்கள் வருகை அதிகரிப்பு

## ஒரே நாளில் ஒரு லட்சம் பேர் தரிசனம்



திருவனந்தபுரம், டிச. 03-
சபரிமலையில் பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதனால் பக்தர்கள் பல மணி நேரம் வரிசையில் காத்திருந்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் கடந்த 17-ம் தேதி முதல் மண்டல கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இதையொட்டி தமிழகம், ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சபரிமலையில் பக்தர்கள் குவிந்து வருகின்றனர். தினமும் அதிகாலை 3 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையிலும், பின்னர் மாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரையிலும் கோயில் நடை திறக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டல சீசனில் நேற்றுமுன்தினம் தான் பக்தர்கள் வருகை மிக அதிகமாக காணப்பட்டது. நேற்று முன்தினம் தரிசனத்திற்கு ஆன்லைன் மூலம் 85,318 பக்தர்கள் முன்பதிவு செய்து இருந்தனர். இவர்களில் நேற்று முன்தினம் இரவு வரை 84 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மேலும் நிலக்கல், பம்பை, திருவனந்தபுரம், எருமேலி உள்பட கேரளாவில் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள உடனடி முன்பதிவு கவுண்டர்கள் மூலம் முன்பதிவு செய்த 15 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்களும் தரிசனம் செய்தனர். எனவே மொத்தமாக நேற்று முன்தினம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சபரிமலையில் குவிந்ததை தொடர்ந்து அதிகாலை முதல் இரவு வரை 18-ம் படி முன்பு பக்தர்களின் நீண்ட வரிசை காணப்பட்டது. நெய் அபிஷேகம் செய்வதற்கும், அப்பம் -அரவணை பிரசாதம் வாங்குவதற்கும் பக்தர்கள் பல மணி நேரம் வரிசையில் காத்திருந்தனர்.

நேற்றும் அதிகாலை முதலே சபரிமலையில் பக்தர்கள் அதிக அளவில் குவிந்திருந்தனர். வரும் நாட்களில் பக்தர்கள் வருகை மிக அதிகமாக இருக்கும் என்பதால் சபரிமலையில் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டு வருவதாக திருவிதாங்கூர் தேவசம் போர்டு தெரிவித்துள்ளது.

# வரலாறு காணாத புதிய உச்சம்: பவுன் ரூ.47 ஆயிரத்தை கடந்தது தங்கம் விலை

சென்னை,டிச. 03-
சென்னையில் நேற்று ஆபரண தங்கத்தின் விலை ரூ.47 ஆயிரத்தை கடந்து வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ளது.

தங்கத்தின் விலை கடந்த மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து ஒருநாள் உயருவதும், மறுநாள் கொஞ்சம் குறைவதுமாக மக்களுக்கு கண்ணாமூச்சி காட்டி வருகிறது. இந்த மாத தொடக்கத்தில் இருந்து தங்கத்தின் விலை சற்று ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது.

இந்நிலையில், சென்னையில் நேற்று ஆபரண தங்கத்தின் விலை ரூ.47 ஆயிரத்தை கடந்து வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ளது. நேற்று ஒரு சவரன் தங்கத்தின் விலை ரூ. 520 உயர்ந்து ரூ.47,320-க்கும், ஒரு கிராம் ரூ.5,915-க்கும் விற்பனையானது.

அடுத்த வாரத்தில் ஒரு கிராம் தங்கத்தின் விலை ரூ.6 ஆயிரத்தை எட்டும் எனவும் தகவல் வெளியாகி உள்ளது, அதே போல வெள்ளியின் விலை கிராமுக்கு ஒரு ரூபாய் உயர்ந்து ரூ.83.50-க்கும் ஒரு கிலோ ரூ.83,500-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## 2 நாட்கள் கனமழை எச்சரிக்கை:

# சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு நாளை விடுமுறை

காஞ்சிபுரம்,டிச. 03-
2 நாட்கள் கனமழை எச்சரிக்கை காரணமாக காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் நாளை (திங்கட்கிழமை) பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும். இந்த புயலுக்கு 'மிக்ஜம்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயல் இன்று (4-ம் தேதி) வட தமிழக கடலோர பகுதிக்கு நகர்ந்து 5-ம் தேதி நெல்லூர்-மசூலிப்பட்டினம் இடையே கரையை கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கும் 2 நாட்களுக்கு மிக கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. புயல் கரையை கடந்துவிட்டதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் என சென்னை காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. கனமழை எச்சரிக்கை காரணமாக சென்னை மாவட்டத்தில் வரும் திங்கட்கிழமை பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே உத்தரவிட்டுள்ளார். ஏற்கனவே காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் திங்கட்கிழமை பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜே.இ.இ மெயின் தேர்வுக்கு

# விண்ணப்பிக்க நாளை வரை கால அவகாசம் நீட்டிப்பு

புது டெல்லி, டிச. 03-
ஜே.இ.இ. மெயின் தேர்வுக்கு விண்ணப்பிக்க நாளை வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் உயர்கல்வித்துறை நிறுவனங்களான ஐ.ஐ.டி. மற்றும் என்.ஐ.டி.களில் இளநிலை பட்டப்படிப்புகளில் சேர, ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு (ஜே.இ.இ) நடத்தப்பட்டு வருகிறது. இந்த தேர்வானது மெயின் தேர்வு மற்றும் அட்வான்ஸ் தேர்வு என இரு பிரிவுகளாக நடத்தப்படுகிறது.

இதில், ஜே.இ.இ மெயின் தேர்வு ஆண்டு தோறும் 2 கட்டங்களாக நடத்தப்படும். அதன்படி, 2024-25-ம் கல்வியாண்டுக்கான ஜே.இ.இ மெயின் தேர்வு வருகிற 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி முதல் பிப்ரவரி 1-ம் தேதி வரை நடை பெறவுள்ளது.

இதற்கான, ஆன்லைன் விண்ணப்ப பதிவு கடந்த மாதம் 1-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை நடைபெற்றது. இதற்கிடையில், ஜே.இ.இ மெயின் தேர்வுக்கு விண்ணப்பிக்க கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும் என்று தேசிய தேர்வுகள் முகமைக்கு மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் இதனை ஏற்றுக் கொண்ட தேர்வு முகமை, ஜே.இ.இ மெயின் தேர்வுக்கு விண்ணப்பிக்க நாளை 4-ம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்துள்ளது.

# ஒருவர் செய்த தவறுக்காக ஒட்டுமொத்த அமலாக்கத்துறையை குற்றம் கூற முடியாது

## தூத்துக்குடியில் அண்ணாமலை பேட்டி

தூத்துக்குடி, டிச. 03-
அமலாக்க துறையில் ஒருவர் செய்த தவறுக்காக அனைவருமே தவறானவர்கள் என்று பார்ப்பது சரியல்ல என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

சென்னை ஒரு மழைக்கு கூட தாக்கு பிடிக்க முடியாத நிலையில் இருந்து வருகிறது. சென்னையில் மழை வெள்ளத்தோடு வீடுகளுக்குள் சாக்கடை நீர் செல்கிறது. மக்கள் மிகப்பெரிய அவதியை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலை மாற வேண்டும். உலக அளவிலான நிபுணர்களை வரவழைத்து இதற்கு தீர்வு காண வேண்டும். முன்பு ஜெனிவாவில் இது போன்ற நிலை இருந்தது அதற்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மதுரையில் அமலாக்கத் துறை அதிகாரி ஒருவர் லஞ்ச புகாரில் கைது செய்யப்பட்டு இருக்கிறார். தவறு யார் செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது போன்ற நடவடிக்கை ராஜஸ்தானில் கடைசியாக நடைபெற்றுள்ளது.

தற்போது இங்கு நடைபெற்றுள்ளது. இது முதலும் முடிவும் அல்ல, அந்தத் துறையில் ஒருவர் செய்த தவறுக்காக அனைவருமே தவறானவர்கள் என்று பார்ப்பது சரியல்ல.இது போல காவல் துறையில் ஒருவர் தவறு செய்தால் காவல்துறை முழுமையாக தவறு என்று கூற முடியுமா?

காங்கிரஸ் எம்.பி. ஜோதி மணி மற்றும் தமிழக அரசியல்வாதிகள் அரசியல் முதிர்ச்சி இன்றி பேசி வருகின்றனர்.நடந்து முடிந்த 5 மாநில சட்டமன்ற தேர்தலில், ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வர உள்ளது.

தெலுங்கானாவில் கடந்த முறை ஒரு இடத்தில் வென்ற நிலையில் இந்த முறை இரட்டை இலக்கங்களில் பா.ஜ.க. வெற்றி பெற உள்ளது. மிசோராமில் அந்த மாநில கட்சி வெற்றி பெறும் சூழல் உள்ளது. சத்தீஸ்கரில் தேர்தல் முடிவுகள் வெளி வந்த பிறகுதான் முழுமையாக தெரியவரும்.

.தூத்துக்குடி, நெல்லையில் படுகொலைகள் நடைபெற்றுள்ளது. தமிழக முழுவதுமே கொலைக்களமாக மாறி வருகிறது. காவல்துறை சுதாரித்துக் கொண்டு தீவிரமாக செயல்பட்டு குற்றங்களை தடுக்க வேண்டும்.

மாலத்தீவில் கைது செய்யப்பட்ட தூத்துக்குடி மீனவர்களின் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு அரசியல் சூழல் மாறி இருப்பதன் காரணமாக இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு தீர்வு காணப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆதித்யா எல்-1 விண்கலம் குறித்து இஸ்ரோ வெளியிட்ட முக்கிய தகவல்

பெங்களூரு, டிச. 03-
ஆதித்யா எல்-1 விண்கலம் குறித்து முக்கிய தகவலை இஸ்ரோ வெளியிட்டு உள்ளது. அதன்படி விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள 7 கருவிகளில் 2-வது கருவியான சோலார் விண்ட் அயன் ஸ்பெக்ட்ரோமீட்டர் என்ற கருவி தற்போது செயல்பட தொடங்கியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா-எல் 1 என்ற விண்கலத்தை இஸ்ரோ, கடந்த செப்டம்பர் 2-ம் தேதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலமானது 125 நாட்கள் பயணம் செய்து 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் உள்ள லெக்ராஞ்சியன் புள்ளி-1ஐ சென்றடையும் என்றும், அங்கிருந்து சூரியனை ஆய்வு செய்யும் பணியில் விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்து இருந்தனர்.

இதற்கிடையில், ஆதித்யா எல்-1 விண்கலம் வருகிற ஜனவரி 7-ம் தேதி லெக்ராஞ்சியன் புள்ளியை சுற்றி நிலைநிறுத்தப்படும் என்று சமீபத்தில் இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில், ஆதித்யா எல்-1 விண்கலம் குறித்து முக்கிய தகவலை இஸ்ரோ வெளியிட்டு உள்ளது.

விண்கலத்தில் 7 கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த கருவிகளில் இரண்டாவது கருவியான சோலார் விண்ட் அயன் ஸ்பெக்ட்ரோமீட்டர் என்ற கருவி தற்போது செயல்பட தொடங்கியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஆதித்யா சூரிய காற்று துகள் கருவியில் புரோட்டான், ஆல்பா துகள்களில் உள்ள எண்ணிக்கை மாறுபாடு கண்டறியப்பட்டுள்ளது. 2 நாட்களில் ஸ்பெக்ட்ரோமீட்டர் கருவியால் கைப்பற்றப்பட்ட புரோட்டான் மற்றும் ஆல்பா துகள் எண்ணிக்கையில் உள்ள ஆற்றல் மாறுபாடுகளை ஹிஸ்டோகிராம் விளக்குகிறது.

# புயலை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக இருக்கிறது: வருவாய்த்துறை அமைச்சர்

சென்னை, டிச. 03-
மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக இருப்பதாக பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வங்கக்கடலில் நிலை கொண்டு இருக்கும் காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், சாலைகளின் பல்வேறு பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதால், மக்கள் அவதியடைந்துள்ளனர்.

இந்த நிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக இருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் மழை பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோமோ, அப்பகுதிக்கு மீட்புக் படைகளை அனுப்பி வைத்திருக்கிறோம்.

புயலால் சேதம் அடையும் மரங்கள், மின்கம்பங்களை விரைந்து அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தேவையான இடங்களில் நிவாரண முகாம்கள் அமைக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.குறிப்பாக திருவள்ளூர், சென்னை மாவட்டங்களில் காற்றுடன் கூடிய மழை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வரை ஐந்து மனித உயிரிழப்புகளும், 98 கால்நடைகளும் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் வடகிழக்கு பருவமழை பாதிப்பால் இது வரை 420 குடிசை வீடுகள் பாதிப்படைந்துள்ளன. உயிர் பலி, குடிசைகள் சேதமடைந்தால் உடனடி நிவாரணம் வழங்கப்படும். பயிர்கள் சேதமடைந்தால் கணக்கெடுப்பு நடத்திதான் நிவாரணம் வழங்கப்படும். மண்டல அலுவலர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் களத்துக்குச் செல்ல முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பா.ஜ.க. அரசு, தனது அரசியல் எதிரிகளை பழிவாங்க பயன்படுத்தும் கருவியான அமலாக்கத் துறையில் எந்த அளவுக்கு லஞ்சம் ஊழல் புரையோடிக் கிடக்கிறது என்பதற்கு அமலாக்கத்துறை அதிகாரியின் கைது வெளிச்சம் போட்டு காட்டுகிறது. இதன் மூலம் அமலாக்கத்துறையின் சாயம் வெளுத்துவிட்டது.

- வைகோ



பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டியது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாலும், பா.ஜ., - அ.தி.மு.க.,வை வீழ்த்த வேண்டும் என்பதற்காகவும் தி.மு.க.,வுடன் இணைந்து செல்ல வேண்டியிருக்கிறது. நாங்கள் மின் கட்டண உயர்வு பிரச்சினை உள்ளிட்ட மக்கள் பிரச்னைகளுக்காக அதிக போராட்டங்களை நடத்துகிறோம்.

- கே.பாலகிருஷ்ணன்



பரபரப்பான சென்னை நகருக்குள் சாலையை மறித்து கார் பந்தயம் அவசியமா?. நிதி நிலைமை மோசமாக உள்ளதாக கூறும் தமிழக அரசு தனியார் கார் பந்தயத்திற்கு ரூ 40 கோடி ஒதுக்க அவசியம் என்ன?. சென்னைக்கு பதில் இருங்காட்டுக்கோட்டையில் கார் பந்தயத்தை தமிழக அரசு நடத்த வேண்டும்.

- எல்.முருகன்



மழை - வெள்ளத்தால் சூழப்படும் வாய்ப்புள்ள பகுதிகளில் வாழும் மக்களை நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மிக்ஜம் புயல் - மழைக் காலத்தில் மின்கசிவு, மின்கம்பிகள் அறுந்து விழுதல் போன்ற விபத்துகள் நடக்காமல் தடுக்கவும் மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ராமதாஸ்



தென்காசி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் வீரமணி 91 வது பிறந்தநாள் விழாவில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு புத்தகங்களை வெளியிட்டனர். உடன் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி சுற்று வட்டாரப் பகுதிகளில் நேற்று இரவு முழுவதும் பெய்த மழை காரணமாக குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஐயப்ப பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



**தென்காசி டிச.03:**

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் மாலை ஏழு மணிக்கு நடைபெற்றது

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கல்வியில் விளையாட்டில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு இளம் சாதனையாளர்கள் விருது வழங்குவதற்கான விண்ணப்ப படிவத்தை தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் வழங்கினார்.

நாடார் மகாஜன சங்கத்தை தோற்றுவித்தவரும் நாடார் சமுதாயத்தில் முதல் மாநாடு தன் சொந்த செலவில் பொறையாரில் நடத்திய வரும் ஊர்கள் எங்கும் நாடார் உறவின் முறைகளை உருவாக்கியவரும் நாடார்கள் ஒன்று கூடி இருக்க வேண்டும் என்பதற்காக நாடார் சங்கங்களை உருவாக்கிய வருமான ராவ் பகதூர் ரத்தினசாமி நாடாரின் 111 வது நினைவு நாள் மிகச் சிறப்பான முறையில் அனுசரிக்க வேண்டும் என்றார்

மேலும் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பகுதியில் மத்திய மாநில அரசுக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அதிகமான நிலங்களை தானமாக வழங்கிய காரணத்தினால் டேனிஷ் கோட்டைக்கு முன்பு ராவ் பகதூர் ரத்தினசாமி நாடார் நினைவாக நினைவுத்தூண் அன்றைய அரசால் நிறுவப்பட்டு உள்ளது இந்த நினைவுத்தூண் 1926 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி தஞ்சை மாவட்ட கூடுதல் மாவட்ட நீதிபதியால் நிறுவப்பட்டது தற்போது இந்த நினைவுத்தூண் பராமரிப்பு இன்றி காணப்படுகிறது இதனை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டு நினைவுத் தூண் சுற்றிலும் கான்கிரீட் அமைத்து அரசு பராமரிக்க வேண்டும் என்று தமிழக முதல்வருக்கும், மயிலாடுதுறை ஆட்சி தலைவருக்கும், தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் செயல் அலுவலருக்கும் மனு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என்று பேசினார் இந்த நிகழ்ச்சியில் மாநில துணைப் பொதுச் செயலாளர் ஜான் டேவிட் நாடார், தென்காசி மாவட்ட தலைவர் ராஜ் நயினார், மாநில செயற்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் உடையார் ,சாம்பவர் வடகரை கிளை தலைவர் மோகன், செயலாளர் விஜயன், மற்றும் செல்வராஜ், செந்தூர் பாண்டியன், பரமசிவன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# தூத்துக்குடியில் பெண்ணிடம் 4 பவுன் தங்கச் செயின் பறிப்பு: 2 பேர் கைது

**தூத்துக்குடி.டிச.03-**

தூத்துக்குடியில் கணவருடன் பைக்கில் சென்ற பெண்ணிடம் 4 பவுன் தங்கச் செயினை பறித்த 2பேரை போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி சந்தரவேல்புரம் 2வது தெருவைச் சேர்ந்தவர் கருப்பசாமி மனைவி நாகஜோதி (29). இந்த தம்பதியர் கடந்த நவ.30ம் தேதி தாளமுத்துநகர் அருகேயுள்ள எம்ஜிஆர் நகரில் நடந்த திருமண வீட்டிற்கு சென்று விட்டு பைக்கில் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

அப்போது பைக்கில் பின் தொடர்ந்து வந்த 2 மர்ம நபர்கள் அவர்களை வழிமறித்து நாகஜோதி அணிந்திருந்த 4பவுன் தங்கச் செயினை பறித்துச் சென்றுவிட்டனர்.

இதுகுறித்து புகாரின் பேரில் தாளமுத்துநகர் காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தியதில் மேட்டுப்பட்டியைச் சேர்ந்த சந்தியாகு மகன் அர்னால்டு (25), லூர்தம்மாள் புரத்தைச் சேர்ந்த நாகூர் ஹனிபா மகன் சிங்கரன் (22) ஆகிய 2பேரும் நகை பறித்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் 2பேரை கைது செய்து நகையை மீட்டனர். இதுகுறித்து இன்ஸ்பெக்டர் மணிமாறன் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்.

# தூத்துக்குடியில் பால் வியாபாரி கொலை வழக்கில் 2 பேர் கைது

## பரபரப்பு வாக்குமூலம்

**தூத்துக்குடி.டிச.03-**

தூத்துக்குடியில் பால் வியாபாரி கொலை வழக்கில் 2பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி பண்டாரம் பட்டி மேல தெருவை சேர்ந்தவர் நந்தகுமார் (27), பால் வியாபாரம் செய்து வந்தார். நேற்று காலை 11 மணியளவில் வியாபாரத்தை முடித்து விட்டு தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். மீளவிட்டான் ரோடு, பண்டாரம்பட்டி விலக்கு ரோட்டில் வந்தபோது மர்ம நபர்கள் அவரை வழிமறித்து சரமாரியாக அரிவாளால் வெட்டிக் கொலை செய்தனர்.

இதுகுறித்து சிப்காட் போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகம் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகிறார். இந்நிலையில் இந்த கொலை தொடர்பாக தூத்துக்குடி மீளவிட்டான் பகுதியைச் சேர்ந்த இசக்கி பாண்டியன் மகன் விக்கி (எ) விக்னேஷ்வரன் (36), கே.வி.கே., நகரைச் சேர்ந்த திருமணி மகன் மாரிமுத்து (46) ஆகிய 2பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

போலீசாரிடம் விக்கி (எ) விக்னேஷ்வரன் (36) அளித்த வாக்குமூலத்தில் அவர் கொலை செய்யப்பட்ட நந்தகுமாரிடம் தான் ரூ.2.5லட்சம் கடன் வாங்கியதாகவும், அதனை திருப்பி கொடுக்காததால் வட்டியுடன் சேர்த்து ரூ.4.5 லட்சம் கேட்டு மிரட்டியதால் அவரை நண்பர்களுடன் சேர்ந்து வெட்டிக் கொலை செய்ததாக தெரிவித்துள்ளார். இந்த கொலையில் மேலும் ஒருவரை போலீசார் தேடி வருகின்றனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# இடையன்விளையில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்



**தூத்துக்குடி,டிச.03-**

இடையன்விளையில் நடந்த கால்நடை சிறப்பு மருத்துவ முகாமை ஊராட்சி மன்ற தலைவர் கிங்ஸ்டன் துவக்கி வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் அருகே உள்ள கச்சனாவிளை ஊராட்சிக்குட்பட்ட இடையன்விளையில் கலைஞரின் கால்நடை பாதுகாப்போம் திட்டத்தில் சமுதாய பண்ணைப் பள்ளியின் சார்பில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. கச்சனாவிளை ஊராட்சி மன்ற தலைவர் கிங்ஸ்டன் தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்தார்.டாக்டர் சரண்யா மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் அண்ணமகாராஜன், தொழில் சார் சமூக வல்லுநர் ஜாக்குலின் ஆகியோர் அடங்கிய குழுவினர் ஊராட்சிக்குட்பட்ட கால்நடை களுக்கு சிகிச்சை அளித்தனர். ஏற்பாடுகளை கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குநர் செல்வக்குமார் , ஊராட்சி மன்ற தலைவர் கிங்ஸ்டன், ஊராட்சி செயலர் பர்னபாஸ் மற்றும் வார்டு உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# ஆரோக்கியமான இந்தியா வார விழா போட்டிகள்

**தூத்துக்குடி.டிச.03-**

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் "ஆரோக்கியமான இந்தியா" வார விழாவினை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "ஆரோக்கியமான இந்தியா வாரம், 2023" என்ற குறிக்கோளுக்குட்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கடந்த 27.11.2023 முதல் 01.12.2023 வரை நடத்தப்பட்டது. இதன்முகத்தான் கல்லூரி மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் குறிப்பாக கட்டுரைப் போட்டி, யோகா போட்டிகள், சுவரொட்டி தயாரிப்பு போட்டி, வேடிக்கை விளையாட்டுகள், கைப்பந்து போட்டி, கூடைப்பந்து போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.இந்நிகழ்வில் கல்லூரியின் அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதிகட்டமாக நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரியின் அனைத்து ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும், கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டு "ஆரோக்கிய இந்தியா-2023" என்ற குறிக்கோளுக்குட்பட்ட உறுதிமொழியினை அளித்தனர்.கல்லூரியின் முதல்வர் அகிலன் நிறைவு விழாவில் பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழினையும், பரிசுகளையும் வழங்கி ஊக்குவித்தார். இந்நிகழ்ச்சியினை விளையாட்டு செயலாளர் க.சே. விஜய் அமிர்தராஜ், உடற்கல்வி இயக்குநர் நடராஜன் ஒருங்கிணைந்து நடத்தினர்.



**கார்த்திக்கை மாதம் சுவாமி ஐயப்பனுக்கு விரதம் இருக்கும் ஐயப்ப பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக தென்காசியிலிருந்துபம்பைக்குமாலை3.30மணி,இரவு8.00 மணிக்கும் பம்பையிலிருந்து தென்காசிக்கு காலை 7 மணி, 8 மணிக்கும் இயக்கப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கும் ஐயப்ப பக்தர்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.**

# மாநில அளவிலான எறிபந்து போட்டியில் திருவேங்கடம் ஸ்ரீ கலைவாணி பள்ளி சாதனை



**சங்கரன்கோவில், டிச.3-**

தமிழக அரசு சார்பில் மாநில அளவிலான எறிபந்து போட்டி கோயம்புத்தூரில் உள்ள ஆதித்யா பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதில் 38 மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் இருந்து மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் தென்காசி மாவட்டத்தில் உள்ள திருவேங்கடம் ஸ்ரீ கலைவாணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் சூப்பர் சீனியர் பிரிவில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளனர். வெற்றி பெற்று சாதனை படைத்த திருவேங்கடம் ஸ்ரீ கலைவாணி பள்ளி மாணவிகளை முதன்மைகல்வி அலுவலர் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர், உடற்கல்வி ஆய்வாளர், பள்ளி நிர்வாகி பொன்னழகன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள், ஆசிரியர் ஆசிரியைகள் ஊர் பொதுமக்கள் பாராட்டினார்கள்.

# தூத்துக்குடியில் பைக் விபத்தில் வாலிபர் பலி

**தூத்துக்குடி.டிச.03-**

தூத்துக்குடியில் சென்டர் மீடியனில் பைக் மோதிய விபத்தில் வாலிபர் உயிரிழந்தார். அவரது நண்பர் படுகாயம் அடைந்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி அருகேயுள்ள நரிப்பையூர் தெற்கு தெருவைச் சேர்ந்தவர் சவரிமுத்து மகன் அருள்ராஜ் (21), இவரது நண்பர் சுரேஷ் பாண்டி மகன் தினேஷ் (30). இவர்கள் 2பேரும் நேற்று திருநெல்வேலிக்கு பைக்கில் சென்று கொண்டிருந்தனர். தூத்துக்குடி அந்தோணியார் புரம் அருகே வந்தபோது பைக் கட்டுப்பாட்டை இழந்து சென்டர் மீடியனில் மோதி விபத்துக்குள்ளானது.இவ்விபத்தில் இருவரும் பலத்த காயம் அடைந்தனர். இதில், அருள்ராஜ் சம்பவ இடத்திதிலேயே பரிதாபமாக உயிரிழந்தார். படுகாயம் அடைந்த தினேஷ் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து புதுக்கோட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வின்சென்ட் அன்பரசி வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்.

# கடையநல்லூர் பெரிய பள்ளிவாசல் மகுதிக்கு சொந்தமான பெண் யானையை மீட்டெடுக்க எம்.எல்.ஏ.விடம் மனு



**கடையநல்லூர் டிச.03-**

கடையநல்லூர் பெரிய பள்ளிவாசல் மகுதிக்கு சொந்தமானது பெண் யானை ஜெயினியை மீட்டெடுக்க சவுதி அரேபியா அம்மா பேரவை செயலாளர் எஸ்.எம். மைதீன் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பாவிடம் கோரிக்கை மனு வழங்கினார் அம்மனுவில் கடையநல்லூரில் உள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த பெரிய பள்ளிவாசல் மகுதிக்கு சொந்தமானது பெண் யானை ஜெயினி. கடந்த 25 வருடங்களாக கடையநல்லூர் மக்களின் உணர்வுகளுடன் இரண்டறக் கலந்த பெண் யானை ஜெயினி தமிழக அரசால் கைது செய்யப்பட்டு யானைகள் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு பின்னால் ஜல்லிக்கட்டை தடை செய்ய காரணமாக இருந்த பீட்டா அமைப்பு யானை சித்திரவதை செய்யப்படுவதாகவும் பிச்சை எடுக்க வைக்கப்படுவதாகவும் மனு அளித்துள்ளது.ஆன்மீகத்தை ஒழிப்பதற்காக பீட்டாவும் தமிழக அரசும் கங்கணம் கட்டி தமிழர்களின் கலாச்சாரத்திலும் ஆன்மீக மத வழிபாடுகளிலும் ஒடுக்கு முறையை செய்து வருகிறது. கடையநல்லூர் பெரிய பள்ளிவாசலில் நடைபெறும் கந்தூரி திருவிழாவில் கொடியேற்றும் நிகழ்வு யானையின் மீது கொடிக்கம்பம் எடுத்துச் செல்லப்பட்டு கொடியேற்ற நிகழ்வு நடைபெறும். இப்பேர்ப்பட்ட கலாச்சாரப் பிணைப்பு உள்ள யானையை பிச்சை எடுப்பதாக அவதூறு பரப்பி சிறை பிடிக்கப்பட்டிருப்பது பொது மக்களின் உணர்வுகளை வதைத்துள்ளது தமிழக அரசு. தமிழ் மக்களின் கலாச்சாரங்களை மீட்டெடுக்க தமிழக அரசுக்கு மாவட்ட கழகம் சார்பில் பெண் யானை ஜெயினியை மீட்டெடுத்து மீண்டும் கடையநல்லூர் வீதிகளில் ஜெயினி பவனி வர வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவினை கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளியிடம் அம்மா பேரவை செயலாளர் வழங்கினார்

# பாஜக தலைமை மீது முன்னாள் தென்காசி மாவட்ட திறன் மேம்பாட்டு அணி தலைவர் குற்றச்சாட்டு



**தென்காசி,டிச.03-**

பாரதிய ஜனதா கட்சியின் தென்காசி மாவட்ட விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு முன்னாள் தலைவர் எஸ்.ஆர்.கிருஷ்ணன் பாஜகவின் அடிப்படை உறுப்பினரிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இது குறித்து அவர் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது, நான் தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு முன்னாள் தலைவராக கட்சி பணியாற்றி 100 நாட்களில் 2550 புதிய உறுப்பினர்களை கட்சியில் இணைத்து மாநில தலைவர் அண்ணாமலையின் பாராட்டை பெற்றேன்.

இந்நிலையில் தென்காசி மாவட்ட பாஜக தலைவரின் நடவடிக்கைகள் சாதி அடிப்படையில் உள்ளது. நிர்வாகிகள் நியனம் செய்வதில் பெரும்பான்மை சமுதாயத்தினை தொடர்ந்து புறக்கணித்து வருகிறார். பெரும்பான்மை சமுதாயத்தினர் நிர்வகித்து வந்த பொறுப்புகளை நீக்கி விட்டு சிறுபான்மை சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு பொறுப்புகளை கொடுத்து வருகிறார்.

இதன் காரணமாக கட்சியினர்களுக்கிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாநில தலைமைக்கு தெரிவித்தும் எந்ததொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.மேலும் தீவிர கட்சி பணியாற்றி வந்த இளைஞர்களுக்கு மாவட்ட தலைமை எந்த ஒரு அங்கீகாரமும் வழங்குவதில்லை. இதன் காரணமாக கட்சிக்கான தேர்தல் பணியாற்றிட கட்சியினரே தயங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது பாராளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு தென்காசி தொகுதியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இது குறித்து மாநில தலைமைக்கு தெரிந்தும் கண்டு கொள்ளாமல் இருக்கிறது.எனவே வரும் தேர்தலில் நோட்டாவிடம் மட்டுமே பாஜக போட்டியிடும் சூழ்நிலை இருக்கும் நிலையில் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் கருத்துக்களை காது கொடுத்து கேட்காத மாவட்ட தலைமையை கண்டித்தும் பலமுறை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காத மாநில தலைமையை கண்டித்தும் நான் பாரதிய ஜனதா கட்சியின் அடிப்படை உறுப்பினரிலிருந்து முற்றிலும் வெளியேறுகிறேன். மேலும் நான் தொடர்ந்து பொதுமக்களுக்கு சேவை செய்யும் வகையில் எனது பொதிகை அறக்கட்டளை சார்பில் செயல்படுவேன் என எஸ்.ஆர்.கிருஷ்ணன் தெரிவித்தார்.

# ஸ்பெல்பீ இன்டர் நேஷனல் ஆங்கிலத் திறன் தேர்வு: இலஞ்சி பாரத் மாண்டிசோரி சாதனை



**குற்றாலம் டிச.03-**

ஸ்பெல்பீ இன்டர் நேஷனல் நிறுவனம் நடத்திய ஆங்கிலத் திறன் தேர்வில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியின் முதல் வகுப்பு மாணவர்கள் விஜயதர்ஷன், சூர்ய ஜெகன், இரண்டாம் வகுப்பு மாணவி பார்கவி, மூன்றாம் வகுப்பு மாணவி கிருத்திகா தேவி, நான்காம் வகுப்பு மாணவர் ஜீவா ஐந்தாம் வகுப்பு மாணவர் சிவகார்த்தி, ஆறாம் வகுப்பு மாணவிகளான, மிருதுளா ஜனனி, சுபிக்ஷா தேவி, சித்ரா, ஏழாம் வகுப்பு மாணவர் கோதண்டராமன், எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகளான தேவேஷ் காளிதாஸ், சிவானி, ஹர்சிதாஸ்ரீ, ஆகியோர் பள்ளி அளவிலான போட்டியில் வென்று பள்ளிகளுக்கு இடையே நடைபெறும் ஆங்கிலத் திறன் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர். இம்மாணவ மாணவியருக்கு ஸ்பெல்பீ இன்டர்நேஷனல் நிறுவனத்தின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஸ்பெல்பீ இன்டர்நேஷனல் ஆங்கிலத் திறன் தேர்வில் வெற்றி பெற்று பள்ளிகளுக்கு இடையே நடைபெறும் போட்டிக்கு தகுதி பெற்ற மாணவ மாணவிகளை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் பாராட்டினர்.

# பெண்ணை கொலை செய்தவர் கைது

**தூத்துக்குடி.டிச.03-**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு அருகேயுள்ள காப்புலிங்கபட்டி நடுத் தெருவைச் சேர்ந்தவர் கருப்பசாமி மகள் பொன்வண்டு (62). இவருக்கு திருமணமாகவில்லை. தனியே வசித்து வருகிறார். நேற்று இவர் அங்குள்ள பஞ்சாயத்து குழாயில் துனி துவைத்துக் காண்டிருந்தாராம். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த மகராஜன் மனைவி சண்முகத்தாய் என்பவருடன் தகராறு ஏற்பட்டுள்ளது.இதையடுத்து சண்முகத்தாய் தனது கணவரிடம் கூறியுள்ளார். இதில் ஆத்திரம் அடைந்த அவர் பொன்வண்டுவை கம்பால் தாக்கியுள்ளார். இதில் பலத்த காயம் அடைந்த அவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று இரவு இறந்தார். இதுகுறித்து கயத்தாறு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் விஜயகுமார் வழக்குப் பதிந்து மகராஜனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

**தவறிவிட்டது**

நான் கடந்த 20.11.2023 அன்று மத்தளம்பாறை பஸ் நிலையத்தில் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்த போது எனது புல்லுக்காட்டுவலசை அரசு மேல்நிலைப்பள்ளி அசல் மாற்றுச்சான்றிதழ் (Transfer Certificate) Reg.No. 1047464/ 21.05.15, TMR Code : C 1056147 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

M.Kumari
D/o.Madasamy
85/72, Muppudathi Amman Kovil Street,
Mathalamparai - 627 814
Mob: 9042200606

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி

தில்லைநடராஜன்,
தபெ. மூக்கையாத்தேவர்,
கஎண்: 2/58, தெற்குதெரு,
தெற்குமயிலோடை,
கயத்தார் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், கயத்தார்.
சார்பதிவாளர், கயத்தார்.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது தாயார் லெட்சுமி என்பவர் கடந்த 01.04.2020. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
தில்லைநடராஜன்,
மனுதார்.

# தென்காசியில் திராவிடர் கழகம் சார்பில் கீ.வீரமணி 91வது பிறந்தநாள் விழா



**தென்காசி.டிச.03-**
தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தின் கூட்டரங்கில் திராவிடர் கழகம் சார்பில் ஆசிரியர் கீ.வீரமணி 91-ஆவது பிறந்தநாள் விழா நேற்று மாவட்டத்தலைவர் வழக்கறிஞர் த.வீரன் தலைமையில் எழுச்சியோடு நடைபெற்றது மாநில ஒருங்கிணைப்பாளர் உரத்தநாடு இரா.குணசேகரன் பிறந்த நாள் செய்தியினை வாசித்தார்.

புதிய புத்தகமான வாழ்வியல் சிந்தனை பாகம்-17, பகுத்தறிவுப்போராளி ஆசிரியர் கி.வீரமணி 91-ஆவது பிறந்தநாள் விழா மகளிர் மலர், விடுதலை ஆசிரியராக 60 ஆண்டுகள் என்ற நூல்களை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் வெளியிட்டு சிறப்புரையாற்றினார். சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், தென்காசி வடக்கு திமுக மாவட்ட செயலாளர் ஈ.இராசா நூல்களை பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழக காப்பாளர் டேவிட் செல்லத்துரை, மாநில பகுத்தறிவு கழக அமைப்பாளர் ஆலடி எழில்வாணன், மாநில பகுத்தறிவு கழக துணைத்தலைவர் கே.டி.சி.குருசாமி தென்காசி நகர் மன்றத் தலைவரும், திமுக நகர செயலாளருமான சாதிர், தென்காசி நகர் மன்ற துணைத்தலைவர் கே.என். எல்.சுப்பையா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஷேக் தாவுது, கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் செல்லத்துரை, முக்கூடல் தேர்வு கழக செயலாளர் லட்சுமணன், கீழப்பாவூர் சேர்மன் பி எம் எஸ் ராஜன், தென்காசி யூனியன் சேர்மன் கனகராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதா, சுதாகர் சரஸ்வதி, பாஸ்கரன், தமிழ்செல்வன், மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, சங்கரநாராயணன், செங்கோட்டை நசீர், மாவட்ட மதிமுக அவைத்தலைவர் கள்,வெங்கடேசன்

செல்வ சக்தி வடிவேல், , நகர செயலாளர் கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை, கூட்டுறவு சங்க துணைத்தலைவர் கணேசன், குற்றாலம் பேசிமுத்து, மதுரை வழக்கறிஞர் கணேசன், மாவட்ட துணைத்தலைவர் செந்தில்குமார், முத்து சுப்பிரமணியன், பவுல், சுதன், தென்காசி 1வது வார்டு செயலாளர் ராமராஜ், திருநாவுக்கரசு, வெல்டிங் மாரியப்பன், சபீக் அலி, மாலிக், அறிவாலயம் காவலர் கணேசன் ஆகியோர் பங்கேற்று நூல்களை பெற்று சிறப்பித்தனர் நிறைவாக கழகப்பேச்சாளர் இராம.அன்பழகன். மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் சிறப்புரையாற்றினர் 61 செட் புத்தகங்களை பெற்று மகிழ்ந்தனர். ஆலங்குளம் குமார் நன்றி கூறினார்.

## சிபிஎஸ் ஒழிப்பு இயக்கத்தின் சார்பாக பட்டினி போராட்டம்

**தென்காசி டிச.03 :**
சிபிஎஸ் ஒழிப்பு இயக்கத்தின் சார்பாக தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கலந்து கொள்ளும்பட்டினி போராட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் மாவட்ட செயலாளருமான கங்காதரன் தலைமை வகித்தார். மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர்கள் ஊரகவளர்ச்சித்துறை தமிழ்பாண்டியன், பொது சுகாதாரத்துறை அசோக், வருவாய்த்துறை வெங்கடேஷ், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்ட செயலாளர் அந்தோணிராஜ், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஎஸ் ஒழிப்பு இயக்கம் மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க சுப்பிரமணியன் துவக்கவுரையாற்றினர். அரசு அலுவலர்கள் பார்த்தசாரதி, செய்யது இப்ராகிம் மூசா, ராம்பிரசாத், கோவில்பிச்சை, மாரியப்பன், மதிவாணன், சதிஸ்குமார், செல்வகுமார், கண்ணன், கணேசன், வீரபிரகாஸ், வைகுண்டசாமி, சாலமோன், சண்முகசுந்தரம், காளிராஜ், ஸ்டீபன் சேவியர் ஞானம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாவட்ட தலைவர் சுப்பிரமணியன் நிறைவுரை வழங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட இணைச் செயலாளர் தங்க பாண்டிய நன்றியுரை வழங்கினார்.

## அரிவாளால் தாக்கி கொலை முயற்சி: 2 பேர் கைது

**தூத்துக்குடி டிச.03-**
தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் அருகேயுள்ள கீரனூர் பகுதியை சேர்ந்த வேலையா மகன் நாராயணகுமார் (44) என்பவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த அருணாச்சலம் மகன் சங்கரேஸ்வரன் (26) என்பவருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது.இந்நிலையில் நேற்று அன்று நாராயண குமார் மற்றும் அவரது மனைவி ஆகியோர் அவர்களது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த மேற்படி சங்கரேஸ்வரன், அவரது உறவினரான கீரனூர் பகுதியை சேர்ந்த புதுராமன் மகன் ரமேஷ் (26) மற்றும் சிலர் சேர்ந்து நாராயணகுமார் மற்றும் அவரது மனைவியிடம் தகராறு செய்து அவர்களை அரிவாளால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.இதுகுறித்து நாராயணகுமாரின் மனைவி அளித்த புகாரின் பேரில் ஆத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் பாலமுருகன் தலைமையில் உதவி ஆய்வாளர் செல்வகுமார் மற்றும் போலீசார் சங்கரேஸ்வரன் மற்றும் ரமேஷ் ஆகிய 2 பேரையும் கைது செய்தனர். இதுகுறித்து ஆத்தூர் காவல் நிலைய போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருச்செந்தூரில் ரூ.1.68 கோடி புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள் : கனிமொழி எம்.பி. அடிக்கல் நாட்டினர்



**திருச்செந்தூர் டிச.03-**
திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.68 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு கனிமொழி எம்பி அடிக்கல் நாட்டினார்.

திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தூத்துக்குடி பாராளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி , மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் இன்று (01.12.2023) ரூ.25.5 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள். மேலும், ரூ.1.68 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார். திருச்செந்தூர் ஒன்றியம் நடுநாலுமூலைக்கிணறு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 5.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடை மற்றும் நாசரேத் பேரூராட்சி வியாபாரிகள் தெருவில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நூலக கட்டிடம் ஆகியவற்றை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி , மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் திறந்து வைத்தார்.

மேலும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆறுமுகநேரி பேரூராட்சி பெருமாள்புரத்தில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, காயல்பட்டினம் நகராட்சி அருணாச்சலபுரத்தில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தேசிய துவக்கப்பள்ளி கட்டிடம், காயல்பட்டினம் நகராட்சி எல்.ஆர்.நகரில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நூலக கட்டிடம், உடன்குடி ஊராட்சி ஒன்றியம் லெட்சுமிபுரம் ஊராட்சி வேப்பங்காடு பகுதியில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள சி.பா. ஆதித்தனார் உயர்நிலைப் பள்ளி புதிய வகுப்பறை கட்டிடம் மற்றும் நாசரேத் பேருந்து நிலையத்தில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சிமெண்ட் கான்கிரீட் தளம் ஆகிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஊராட்சித் தலைவர் அ.பிரம்மசக்தி, நாசரேத் பேரூராட்சித் தலைவர் நிர்மலா ரவி, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் குருச்சந்திரன், ஏரல் வட்டாட்சியர் கைலாசகுமாரசாமி, நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் பரமேஸ்வரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் செல்வக்குமார், முக்கிய பிரமுகர்கள் உமரிசங்கம், ராமஜெயம் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் நகை கடையில் கொள்ளை

**தூத்துக்குடி.டிச.03-**
தூத்துக்குடி பங்களா தெருவைச் சேர்ந்தவர் கந்தன் மகன் சிவசுப்பிரமணியன் (45). இவர் தெற்கு சம்பந்த மூர்த்தி தெருவில் நகைக்கடை நடத்தி வருகிறார். நேற்று இரவு கடையை பூட்டிவிட்டுச் சென்றுள்ளார். இன்று காலை கடையை திறக்க வந்தபோது ஷட்டரில் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தது.இதனால் அதிர்ச்சியடைந்த அவர் மத்திய பாகம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து இன்ஸ்பெக்டர் ஷோபியா ஜென்சி மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். கடையில் இருந்த 65 கிராம் தங்கம் மற்றும் 1 கிலோ வெள்ளி நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டிருந்தது தெரியந்தது.இதுகுறித்து சிவசுப்பிரமணியன் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிந்து, கொள்ளையர்களை தேடி வருகின்றனர். சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளில் கொள்ளை அதிகாலை 2 மணி முதல் 4 மணி வரை நடந்துள்ளது தெரியவந்தது. கொள்ளையில் ஈடுபட்டவர்கள் யார்? வடமாநில கொள்ளையர்களின் கைவரிசையா? என்று பல்வேறு கோணங்களில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அதிநவீன பல் சிகிச்சை: கண்காணிப்பாளர் பாலகிருஷ்ஷ்ணன் பேட்டி



**கோவில்பட்டி டிச.03-**
கோவில்பட்டியில் இயங்கிவரும் தூத்துக்குடி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் பல்சிகிச்சைக்கு தற்போது நவீன கருவிகள் மூலம் வேர்சிகிச்சைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது அதில் வெற்றியும் காணப்பட்டுள்ளது. என மாவட்டஅரசு மருத்துவமனை கண்காணிப்பாளர்; பாலகிருஷ; ணன் செய்தியாளர்களுக்கு பேட்டியளிதார். அப்போது அவர் கூறியதாவது.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர்தாலுகா, ராவுத்தன் பட்டி கிராமத்தைச் சேர்ந்த மிட்டாய்கடைஊழியர் ராமச்சந்திரன் என்பவர் இந்த சிகிச்சைமூலம் பயன்அடைந்துள்ளார். ஏற்கனவே பல்சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளில் ஒரு பல்லுக்கு 5000, முதல் 10 ஆயிரம் வரை செலவுசெய்து வந்தநிலையில் மருத்துவகல்லூரியில் மட்டும் செயல்படுத்தக்கூடிய பல்வேர்சிகிச்சை எனும் நவீனபல் மருத்துவம் தற்போது கோவில்பட்டியில் செய்யப்பட்டு வெற்றி கண்டுள்ள நிலையில் இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். கோவில்பட்டியில் முதன்மை குடிமை பல்மருத்துவர் சுகுணா, தினமும் அரசுமருத்துவமனையில் பல்நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். மேல்சிகிச்சைக்கு நெல்லை, தூத்துக்குடி மருத்துவகல்லூரிகளுக்கு செல்லவேண்டிய நிலை இருந்தது. தற்போது இங்கு அதிநவீனகருவிக்ளை கொண்டு சூத்தைபல்களை எடுக்காமல் நவீனவேர்சிகிச்சைகளை இங்கு செய்யமுடியும். வாரத்தில் திங்கள்கிழமை மட்டும் பல்சுத்தபடுத்தும் சிகிச்சையும், செவ்வாய், வியாழன், சனி ஆகியதினங்களில் விளாத்திகுளத்தில் இருந்து வரும் சிறப்புமருத்துவர் முத்துவள்ளி மூலம் பல்வேர்சிகிச்சையும் செய்யபடும். இதை பொதுமக்கள் மற்றும் பல்நோயாளிகள் பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்தார். பேட்டியின்போது முதன்மை குடிமை பல்மருத்துவர் சுகுணா, சிறப்புமருத்துவர் முத்துவள்ளி, மயக்கமருத்துவர் சுரேஸ், ஆகியோர் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் சங்கரப்பேரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான இடத்தினை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை முதன்மை செயலாளர் பி.அமுதா நேரில் ஆய்வு செய்தார். ஆய்வின் போது, கலெக்டர் கோ.லட்சுமிபதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்லோக.பாலாஜி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன், தூத்துக்குடி சார் ஆட்சியர் கவுரவ் குமார் உடனிருந்தனர்.

**கோவில்பட்டியில்**

# முகநூல் மூலம் வதந்திகளை பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை: மதிமுக மாவட்ட செயலர் எச்சரிக்கை



**கோவில்பட்டி டிச.03-**
தூத்துக்குடி வடக்குமாவட்ட மதிமுக செயலாளரும், கோவில்பட்டி நகர கூட்டுறவுவங்கி முன்னாள்தலைவருமான ஆர்.எஸ்.ரமேஸ், மற்றும் மதிமுக மத்திய ஒன்றிய செயலாளரும், கோவில்பட்டி நகர கூட்டுறவுவங்கி முன்னாள்துணைதலைவருமான சரவணன் ஆகியோர் கோவில்பட்டியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது. கோவில்பட்டி நகரகூட்டுறவுவங்கியின் தலைவராக மூன்றுமுறை நான் பொருப்பு வகித்து வருகின்றேன். 43கோடி டெப்பாசிட்டுடன் வங்கி இயங்கியது.

என் தலைமையில் உள்ள நிர்வாககுழுவின் மீதானநம்பிக்கையின் காரணமாக பொதுமக்கள் ஆதரவோடு 107 கோடி ரூபாய் டெபாசிட்டுக்கு தரம்உயர்த்தி, புதுரோடு தலைமை அலுவலகம், நகரபேரூந்துநிலையம் முன்பு, வேலாயுதபுரம் என மூன்றுகிளைகள் ஏற்படுத்தி நகர்புறத்தில் இருக்கக்கூடிய அனைத்து தொழிலாளர்களும்; வீட்டுஅடமானகடன்கள், நகைகடன்கள், சிறு வணிகர்களுக்கான கடன்கள், மகளிர்சுய உதவிகுழு கடன்கள,; என அரசு அறிவித்த அத்தனை கடன் திட்டங்களையும் வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் நல்ல முறையில் துறைஅதிகாரிகளின் ஒத்துழைப்போடு நடத்திவந்தோம். இதற்கிடையில் கூட்டுறவுத்துறையில் வரவிருக்கின்ற தேர்தலில் நாங்கள் வரக்கூடாது என்பதற்காக எங்கள்மீது சிலவிசமிகள் அதிகாரிகளின் துணை கொண்டு தவறான தகவல்களை பரப்பி வருகின்றனர். முகநூல்வாயிலாகவும், வாட்ஸ்அப், மூலமும் மேற்படி நபர்கள் செய்துவருகின்ற இந்தசெயலை வன்மையாக கண்டிக்கின்றோம். அரசின் சட்டதிட்டப்படி நடந்து கொண்டு செயல்பட்ட எங்கள்மீது வீண்பழி சுமத்துகின்ற அவர்கள் மீது சட்டப்படி கடும்நடவடிக்கை எடுக்கப்படும். என இதன்மூலம் எச்சரிக்கிறோம். இவ்வாறு தெரிவித்தனர்

# பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த ராஜா எம்எல்ஏ



**சங்கரன்கோவில். டிச.3.**
சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி மேலநீலிதநல்லூர் ஒன்றியம் முத்துக்கிருஷ்ணாபுரம் மற்றும் சண்முகநல்லூர் கிராமத்தை சார்ந்த பொதுமக்கள் கிராமத்தில் 30 மற்றும் 10 ஆயிரம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தொட்டி இருந்தும் தண்ணீர் வழங்கவில்லை என ஒன்றிய செயலாளர் பெரியதுரை மூலம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் கோரிக்கை விடுத்தனர். அதனை தொடர்ந்து அந்த பகுதியை உடனடியாக ஆய்வு செய்த வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அதிகாரிகளுடன் கலந்து பேசி உடனடியாக மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் தண்ணீர் ஏற்றி தண்ணீர் வழங்க வலியுறுத்தினார் .ராஜா எம்எல்ஏ வலியுறுத்தியதின் அடிப்படையில் அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து தண்ணீர் ஏற்ற நடவடிக்கை எடுத்தனர். அதை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார்.தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு தண்ணீரை பொதுமக்களுக்கு வழங்கி பேசினார். தங்கள் கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த ராஜா எம்எல்ஏவுக்கு கிராம மக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதில் கிளைக் கழகச் செயலாளர்கள் சுப்பிரமணியன் ,வெள்ளத்துரை ராஜேந்திரன் , சுபாஷ் சந்திர போஸ் ,கணபதிச்சாமி தொண்டரணி அமைப்பாளர் பழனிவேல் முருகன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விஜயாமுத்துப் பாண்டி ,அமமூக நிர்வாகி சௌந்தரபாண்டியன், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சுப்பிரமணியன், ஒன்றிய பிரதிநிதி செல்லையா, எம்எஸ் முத்துப்பாண்டியன், மூர்த்தி ,குருசாமி படையப்பா, பெருமாள், முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசிக்கு பொதிகை ரயிலில் வருகை தந்த திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம்கலையை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் வரவேற்றார் இந்த நிகழ்வில் மாவட்ட மாநில நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அச்சன்கோவில்மற்றும்ஆரீயங்காவுதிருஆபரணகோசாயாத்திரைக்குபொறுப்புஅதிகாரியாக ஹரிஹரன்நியமிக்கபட்டுஉள்ளார்தமிழகம்மற்றும்கேரளாபக்தர்கள்சார்பிலும்அச்சன்கோவில் திருஆபரண கமிட்டியின் சார்பிலும் தலைவர் ஹரிஹரனுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர் நிகழ்ச்சியில் தென்காசி திருஆபரணபெட்டி கமிட்டி சார்பாக செயலர் மாடசாமி ஜோதிடர், ஆலோசகர் கண்ணன், ஏசிஎஸ் குருப், ஜெயகுரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் கோவிலில் உண்டியல்கள் மூலம் ரூ.3.20 கோடி வருவாய்

**திருச்செந்தூர் டிச.03-**
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் உண்டியல் காணிக்கை மூலம் ரூ.3.20 கோடி வருவாய் கிடைத்துள்ளது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 3 நாட்களாக உண்டியல் எண்ணும் பணி கோவில் வசந்த மண்டபத்தில் அறங்காவலர் குழுத்தலைவர் அருள்முருகன் தலைமையில் இணை ஆணையர் கார்த்திக், முன்னிலையில் நடைபெற்றது. அறநிலையத்துறை தூத்துக்குடி உதவி ஆணையர் சங்கர், கண்காணிப்பாளர் ரவீந்திரன், ஆய்வர் செந்தில்நாயகி, அறங்காவலர் குழுத்தலைவரின் நேர்முக உதவியாளர் செந்தமிழ் பாண்டியன் ஆகியோர் மேற்பார்வையில் ஈடுபட்டனர்.

அப்போது உண்டியல் எண்ணிக்கையில் ரூ.3 கோடியே 20 லட்சத்து 73 ஆயிரத்து 501 ரூபாயும், தங்கம் 1 கிலோ 860 கிராம், வெள்ளி 24 கிலோ மற்றும் வெளிநாட்டு கரன்சிகள் 795-ம் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர். உண்டியல் எண்ணும் பணியில் சிவகாசி பதினெண் சித்தர் மடம் பீடம் குருகுல வேத பாடசாலை உழவார பணிக் குழுவினர், தூத்துக்குடி ஜெயமங்கள ஆஞ்சநேயர் உழவாரப்ப ணிக்குழுவினர் மற்றும் கோவில் பணியாளர்கள் ஈடுபட்டனர். பொதுமக்கள் சார்பில் வேலாண்டி, மோகன் ஆகி யோர் பார்வையாளர்களாக பங்கேற்றனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சாணார்பட்டியில் தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்



**நத்தம், டிச. 3**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சாணார்பட்டியில் திமுக வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. இதற்கு திமுக மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர் ராஜாமணி, முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி கலந்து கொண்டு வருகிற நாடாளுமன்ற தேர்தலில் திமுக கடந்த முறை வாங்கிய ஓட்டுகளை விட இந்த முறை அதிகமாக ஓட்டுகள் வாங்க அனைவரும் பணியாற்ற வேண்டும் என்று பேசினார்.இதில் திண்டுக்கல் எம்.பி வேலுச்சாமி,திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி, நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா, நகர செயலாளர் ராஜ்மோகன், சாணார்பட்டி ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜன்,மோகன் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பழுதடைந்து கிடக்கும் முன்சீப் கோர்ட் கட்டிடங்கள்:

# நிலக்கோட்டையில் புதிய சார்பு நீதிமன்றம் அமைக்கப்படுமா?

## பொதுமக்கள் எதிர்பார்ப்பு



**வத்தலகுண்டு, டிச 3**
தமிழகத்தில் உள்ள தாலுகாவில் ஆங்கிலேயர் காலத்தில் இருந்து இடம் பெற்றவை நிலக்கோட்டை தாலுகாவாகும். இது தாலுகா தமிழகம் உருவான காலத்தில் இருந்து தாலுகா மையமாகவே கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தத் நிலக்கோட்டை தாலுகாவை பொருத்தவரை நிலக்கோட்டை நடுவர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 2 நீதிமன்றங்கள் மட்டுமே உள்ளது. இந்த நீதிமன்றங்களில் நிலம் மற்றும் சிவில் சம்பந்தமான வழக்குகள் தொடரப்பட வேண்டும் என்றால் சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கு கீழ் மதிப்புள்ள வழக்குகள் மட்டுமே தொடர வேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வகையில் தற்போது நிலம் மற்றும் விலை உயர்வு என பார்த்தால் மிகக் குறைந்த அளவே நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிகிறது.

ஆனால் நிலக்கோட்டை தாலுகாவில் இருந்து ஒரு லட்சத்திற்கு மேல் உள்ள வழக்குகளை திண்டுக்கல் நீதிமன்றங்களில் சிறுசிறு வழக்குகளை கூட தாக்கல் செய்து வருகின்றன. இதன் காரணமாக நிலக்கோட்டை தாலுகாவிலிருந்து திண்டுக்கல்லுக்கு ஏராளமான விவசாயிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் அலைந்து வருகின்றனர்.

ஆகையால் நிலக்கோட்டை தாலுகாவை மையமாகக் கொண்டு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கின்றன. அவ்வகையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நிலக்கோட்டையில் புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க தமிழக அரசு அனுமதி அளித்தது. இருப்பினும் இதுவரை அதற்கான நடைமுறை எதுவும் பின்பற்றப்படாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது. மேலும் நிலக்கோட்டை சார்பு நீதிமன்றம் அமைக்க கட்டிடங்களுக்கு தேவையான இடம் பல இடங்களில் உள்ளது.

இருப்பினும் ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (முன்சீப் கோர்ட்) செயல்பட்டு வந்த கட்டிடம் பழுதடைந்ததால் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக அப்படியே பூட்டிய படி கிடக்கிறது.

இந்த கட்டிடத்தை அகற்றிவிட்டு முட்பதர்களால் சூழ்ந்துள்ளதை அகற்றி இடத்தில் புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள், வர்த்தக சங்கத்தினர், அனைத்து சமுதாய தரப்பினர், வழக்கறிஞர்கள் சங்கத்தினர், அனைத்து வியாபாரிகள் சங்கத்தினர், சிறு வியாபாரிகள் ஒட்டு மொத்தமாக கோரிக்கை விடுத்துள்ளனர்

# கொசவபட்டி அக்சயா பள்ளியில் உலக சாதனை யோகா நிகழ்ச்சி




**ஒட்டன்சத்திரம்.டிச.3**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கொசவபட்டி அக்சயா பள்ளியில் மெகா உலக சாதனை யோகா மற்றும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அக்சயா பள்ளியில் பயிலும் 142 மாணவர்கள் யோகாவிலும், 18 மாணவர்கள்இசை நிகழ்ச்சியிலும் பங்குபெற்று உலக சாதனைக்கான சான்றிதழ் மற்றும் பதக்கங்களைப் பெற்றனர்.

உலக சாதனையில் யோகாவில் யோகா முத்ரா – 43 மாணவர்கள் 25 நிமிடம், கூர்மாசனம் – 30 மாணவர்கள் 25 நிமிடம்,கந்த பீடாசனம் – 38 மாணவர்கள் 30 நிமிடம்,ஏக பாத சிரசாசனம் – 2 மாணவர்கள் 30 நிமிடம்,சக்ராசனம் – 2 மாணவர்கள் 10 நிமிடம்,சர்வாங்காசனம் – 14 மாணவர்கள் 10 நிமிடம்,கோமுகாசனம் – 6 மாணவர்கள் 20 நிமிடம்,பத்ம பத்மாசனம் – 7 மாணவர்கள் 20 நிமிடம், உலக சாதனையில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகள்: கீபோர்டு 14 மாணவிகள் 30 நிமிடம்,வயலின் – 2 மாணவிகள் 30 நிமிடம்,கீடார் - 7 மாணவர்கள் 30 நிமிடம்நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் கா. மலர்விழிச்செல்வி தலைமைவகித்தார். இந்நிகழ்வானது குலோபல் உலக சாதனை அமைப்பின் நிர்வாகக்குழு அதிகாரி, ராஜேஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் ரேவதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த உலக சாதனை நிகழ்ச்சிக்காக, பல நாட்களாக கடுமையான பயிற்சிகள் மூலம் அரங்கேற்றிய யோகா மாஸ்டர் பிரகாஷ் , பல் இசை பயிற்றுநர் ஜோதி கணேஷ் , விழாவை ஏற்பாடு செய்த சையது அலிபாத்திமா, சுரேஷ், ஜான்பால், மாரிமுத்து, மாலதி, மஞ்சுளா தேவி, நாகராஜ், ஆகியோர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும், பங்கேற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும், உறுதுணையாக இருந்து அனைத்து பெற்றோர்களுக்கும் பள்ளியின் தாளாளர் மற்றும் முதல்வர் பொன்னுச்சாமி ஆகியோர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்

# நிலக்கோட்டை அருகே ராமராஜபுரம் பகுதியில் நாளை மின்தடை

**வத்தலகுண்டு, டிச.03-**
திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகே உள்ள ராமராஜபுரம் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் 04.12. 2023 திங்கள் கிழமை அன்று ராமராஜபுரம் துணை மின் நிலையத்திலிருந்து மின்விநியோகம் வழங்கும் பகுதிகளான ராமராஜபுரம், மட்டப்பாறை, விளாம்பட்டி,பெருமாள் பட்டி, இரும்பாடி ,நாச்சிகுளம், கொம்மன்பட்டி, குள்ளலக்குண்டு, கல்லடிப்பட்டி, கருப்பட்டி, கரட்டுப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என வத்தலக்குண்டு மின் செயற்பொறியாளர் கருப்பையா தெரிவித்தார்.

# ஐ.ஐ.எஃப்.எல் சமஸ்தா நிறுவனம் பத்திரங்கள் மூலம் ரூ .1,000 கோடி திரட்டுகிறது

**சென்னை, டிச 03-**
இந்தியாவின் மிகப்பெரிய வங்கி சாரா மைக்ரோ ஃபைனான்ஸ் நிறுவனங்களில் (என்பிஎப்சி-எம்எப்ஐ) ஒன்றான ஐ.ஐ.எஃப்.எல் சமஸ்தா பைனான்ஸ் நிறுவனம், வணிக வளர்ச்சிக்காகவும் மூலதனத்தை அதிகரிப்பதற்காகவும்முதல் முறையாக பொது வெளியீடு மூலம் பாதுகாக்கப்பட்ட பத்திரங்களை வெளியிட்டு ரூ .1,000 கோடி திரட்டஉள்ளது. இந்த பத்திரங்கள் 10.50% வரை வருவாய் அளிப்பதுடன் பணத்திற்கு அதிக பாதுகாப்பையும்வழங்குகின்றன. இந்த வெளியீடு டிசம்பர் 4, 2023 திங்கள் அன்று தொடங்கி டிசம்பர் 15, 2023 வெள்ளிக்கிழமை முடிவடைகிறது. நிர்வாகத்தின் கீழ் ரூ .73,066 கோடி கடன் சொத்து கொண்ட இந்தியாவின் மிகப்பெரியசில்லறை வணிகத்தில் கவனம் செலுத்தும் வங்கி சாரா நிதி நிறுவனங்களில் ஒன்றான ஐ.ஐ.எஃப்.எல்ஃபைனான்ஸ் நிறுவனத்தின் குழும நிறுவனம்தான் இந்த ஐ.ஐ.எஃப்.எல் சமஸ்தா நிறுவனம்.

இது குறித்து ஐ.எஃப்.எல் சமஸ்தா ஃபைனான்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அனந்தகுமார்.டி கூறுகையில், ஐ.ஐ.எஃப்.எல் சமஸ்தா ஃபைனான்ஸ் இந்தியா முழுவதும் சுமார் 1,500கிளைகள் மூலம் வலுவான இருப்பைக் கொண்டுள்ளது.ஜே.எம்.பைனான்சியல் லிமிடெட், ஐ.ஐ.எஃப்.எல் செக்யூரிட்டீஸ் லிமிடெட், நுவாமா வெல்த் மேனேஜ்மென்ட் லிமிடெட் மற்றும் டிரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் அட்வைசர்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவை இந்த பத்திரவெளியீட்டின் லீட் மேனேஜர்கள் ஆவர் என்று கூறினார்.

# பரமக்குடியில் தடை செய்யப்பட்ட புகையிலை மூட்டைகள் பறிமுதல்



**பரமக்குடி டிச 03**
பரமக்குடி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த சேதுராஜ் மகன் சேது பாண்டி (39) இவர் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலையை விற்பனை செய்து வருவதாக போலீசருக்கு ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் சேது பாண்டியனின் வீட்டில் சோதனை செய்ததில் சுமார் ரூ.1 லட்சம் 38 ஆயிரம் மதிப்புள்ள 386 கிலோ புகையிலை மூட்டைகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.புகையிலை மூட்டைகளை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்று சேதுபாண்டியனையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பரமக்குடியில் காவல்துறை மற்றும் உணவு பாதுகாப்பு துறையினர் பல்வேறு கடைகளில் சோதனை நடத்தி அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமேசான் மற்றும் டைரெக்டரேட் ஜெனரல் ஆஃப் ஃபாரின் ட்ரேட் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**கோவை, டிச 03-**
குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை செயல்படுத்தவும், நாட்டிலிருந்து இ-காமர்ஸ் ஏற்றுமதியை அதிகரிக்கவும், அமேசான் இந்தியா, இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் டைரெக்டரேட் ஜெனரல் ஆஃப் ஃபாரின் ட்ரேட் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது குறித்து டைரெக்டரேட் ஜெனரல் ஆஃப் ஃபாரின் ட்ரேட் இன் கூடுதல் செயலாளர் மற்றும் இயக்குநர் ஜெனரல் சந்தோஷ் சாரங்கி கூறுகையில், வெவ்வேறு மின்-வணிக தளங்களுடனான இத்தகைய முதல் கூட்டு முயற்சியில் 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து 200-300 பில்லியன் டாலர் ஈ-காமர்ஸ் ஏற்றுமதியை எளிதாக்கும் எங்கள் இலக்கை நோக்கிய ஒரு படியாக, டைரெக்டரேட் ஜெனரல் ஆஃப் ஃபாரின் ட்ரேட், அமேசான் உடன் இணைந்து செயல்படுகிறதுஎன்று கூறினார்.

மேலும் அமேசான் இந்தியா இன் குளோபல் டிரேட் இயக்குனர் பூபென்வாகன்கர் கூறுகையில்,இ -காமர்ஸ் ஏற்றுமதியின் இந்த சமீபத்திய வலுவூட்டம் தொழில்நுட்ப ரீதியாக செயல்படுத்தப்பட்ட ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு ஒரு நம்பிக்கைக்குரிய சகாப்தத்தை குறிக்கிறது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். டைரெக்டரேட் ஜெனரல் ஆஃப் ஃபாரின் ட்ரேட் உடனான இந்த ஒத்துழைப்பைப் பற்றி நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்று கூறினார்.



**தேனி மாவட்டம் கைலாசபட்டி ஜீவன் ஜோதி நல மையத்தில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு கலெக்டர் ஷஜீவனா தலைமையில் எய்ட்ஸ் தின விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது.**

# சிறப்பு பல் மருத்துவ முகாம்: விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் துவக்கி வைத்தார்



**விருதுநகர் டிச.3.**
விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் 6 முதல் 18 வயதுடையவருக்கான சிறப்பு பல் மருத்துவ முகாமினை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

மாவட்டத்தில் முதற்கட்டமாக ஏறத்தாழ 500 குழந்தைகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தனியார் மருத்துவமனை மற்றும் மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து தெத்துப் பல்லை சரி செய்வதற்கான தொடர்ச்சியான சிகிச்சைகள் அளிக்கப்பட உள்ளது.இது தொடர்ச்சியாக ஒரு வருடம் காலம் செய்யக் கூடிய சிகிச்சை ஆகும். எனவே பெற்றோர்கள் மாணவ மாணவியர்கள் இந்த சிகிச்சையின் மூலம் தொடர்ச்சியாக சிகிச்சை மேற்கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் துணை இயக்குனர் யசோதாமணி உட்பட பல் மருத்துவர்கள், தனியார் மருத்துவமனை மருத்துவர்கள், மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூரில் அ.ம.மு.க. சார்பில் பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்



**அலங்காநல்லூர், டிச.3-**
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டுக்கடை தனியார் மண்டபத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக தொகுதி அளவிலான பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதற்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் சரவணன் தலைமை தாங்கினார். அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் வக்கீல் கோடீஸ்வரன், மேற்கு ஒன்றிய செயலாளர் ரகு, வாடிப்பட்டி ஒன்றிய செயலாளர் ராஜன், மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூர் செயலாளர் ராஜபிரபு வரவேற்றார்.

கழக அம்மா பேரவை செயலாளர், தெற்கு மாவட்ட கழக செயலாளர் டேவிட் அண்ணாதுரை சிறப்புரையாற்றினார். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தலைமை அறிவிக்கும் வேட்பாளரை மாபெரும் வெற்றி பெற செய்ய நிர்வாகிகள் அனைவரும் தீவிர தேர்தல் பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

பேரூர் செயலாளர்கள் முருகேசன் மதன் திரவியம் பொதுக்குழு உறுப்பினர் ராமநாதன் மாவட்ட துணைச் செயலாளர் வீரமாரி பாண்டியன், பாலு மற்றும் மாவட்ட, மாநில, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருநெல்வேலி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்




**திருநெல்வேலி, டிச 03-**
கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி தற்போது மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருநெல்வேலி ஷோரூமில் நடைபெற்று வருகிறது. தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன. இந்த கண்காட்சியை ராஜ ராஜேஸ்வரி, பாலுபிரதாப், ஷாஹுல் ஹமீது குடும்பத்தினர், டாக்டர் நவ்ரின், சந்திரகலா, ஆகியோர் துவக்கி வைத்தனர். இவர்களுடன் பாசில் கடவன் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருநெல்வேலி கிளை தலைவர்), தமீமுல் அன்சாரி (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருநெல்வேலி கிளை மேலாளர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

கலைநயமிக்க இந்த கண்காட்சி கலைகளில் ஆர்வமுள்ளவர்களின் கண்களுக்கு விருந்தாக அமையும். இந்த கண்காட்சி டிசம்பர் -02-2023 ஆம் தேதி முதல் டிசம்பர் -10-2023 ஆம் தேதி வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம்.மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 12 நாடுகளில் 335-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய நகரங்களில் 24 கிளைகளை கொண்டுள்ளது.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான 'மைன்' பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட 'எரா' மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்தகற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான 'பிரீசியா' நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான 'எத்தினிக்' நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான 'டிவைன்' குழந்தைகளுக்கான நகை தொகுப்பான 'ஸ்டார்லெட்' ஆகியவை இந்தகண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

மரம்
மனிதனின்
உரம்

### கிராண்ட்மாஸ்டர் பட்டம்:
# வைஷாலி - பிரக்ஞானந்தா சாதனை

**சென்னை, டிச. 03-**

வைஷாலி கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றதன் மூலம் உலகின் முதல் சகோதர - சகோதரி கிராண்ட்மாஸ்டர்களாக வைஷாலி - பிரக்ஞானந்தா புதிய சாதனை படைத்துள்ளனர்.



**3-வது வீராங்கனை...**

கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவின் மூத்த சகோதரி வைஷாலி தற்போது செஸ் கிராண்ட் மாஸ்டராக மாறியுள்ளார். ஸ்பெயினில் நடைபெற்ற செஸ் போட்டியில் இந்த சாதனையை அவர் படைத்தார். தன்னை2யைப் படைத்தார். இந்தியாவிலிருந்து கிராண்ட் மாஸ்டர் பட்டத்தைப் பெறும் மூன்றாவது வீராங்கனை வைஷாலி என்பது குறிப்பிடத்தக்கது. வைஷாலிக்கு முன்னதாக கொனேரு ஹம்பி மற்றும் ஹரிகா ஆகியோர் இந்தியாவிலிருந்து கிராண்ட் மாஸ்டர் பட்டங்களை வென்றுள்ளனர்.

**உலகின் முதல்....**

வைஷாலியின் சகோதரரான பிரக்ஞானந்தா கடந்த 2018-ம் ஆண்டு அவரது 12 வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றார். தற்போது அவரது சகோதரி கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றுள்ள நிலையில், இவர்கள் உலகின் முதல் சகோதர - சகோதரி கிராண்ட் மாஸ்டர்கள் என்ற பெருமையைப் பெற்றுள்ளனர். கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற வைஷாலிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**முதல்வர் வாழ்த்து...**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்த வாழ்த்துப் பதிவில் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் மூன்றாவது மற்றும் தமிழகத்தின் முதல் பெண் கிராண்ட்மாஸ்டராக மாறியுள்ள வைஷாலிக்கு மனமார்ந்த வாழ்த்துகள். 2023 ஆம் ஆண்டு உங்களுக்கு சிறந்த ஆண்டாக அமைந்துள்ளது.

நீங்கள் உங்கள் சகோதரருடன் இணைந்து தற்போது உலகின் முதல் சகோதர - சகோதரி கிராண்ட்மாஸ்டர்கள் என்ற வரலாற்றைப் படைத்துள்ளீர்கள் எனப் பதிவிட்டுள்ளார்.

### 91-வது பிறந்தநாள்:
# கி.வீரமணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச. 02-**

91-வது பிறந்தநாளை முன்னிட்டு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று நேரில் சென்று அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி நேற்று தனது 91-வது பிறந்தநாளை கொண்டாடினார். இதையொட்டி அரசியல் தலைவர்கள் பலரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். கி. வீரமணி, திராவிடர் கழகத்தின் தலைவராக கடந்த 1962ல் பெரியாரால் நியமிக்கப்பட்டார்.

கி.வீரமணியின் பிறந்தநாளையொட்டி, சென்னை அடையாறில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில்சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலின், பொன்னாடை அணிவித்து புத்தகம் வழங்கி தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். அப்போது அமைச்சர் மா. சுப்பிரமணியன், திமுக எம்.பி. ஜெகத்ரட்சகன் ஆகியோர் உடனிருந்தனர். மேலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் வலைத்தளத்திலும் கி. வீரமணிக்கு வாழ்த்துத் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

### நண்பர்களை சந்தித்ததில் மகிழ்ச்சி:
# வைரல் செல்பி குறித்து பிரதமர் மோடி பதிவு

**புதுடெல்லி, டிச. 03-**

நண்பர்களை சந்திக்கும் நிகழ்வு மகிழ்ச்சி என்று வைரல் செல்பி குறித்து பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.



இத்தாலியன் பிரதமர் ஜியார்ஜியா மெலோனி உடன் பிரதமர் நரேந்திர மோடி எடுத்துக் கொண்ட செல்ஃபி வைரலானதைத் தொடர்ந்து, எக்ஸ் பக்கத்தில் அதுகுறித்து பதிவிட்டுள்ளார் மோடி. துபையில் நடைபெற்ற காப்28 பருவநிலை மாநாட்டில் கலந்து கொண்ட மோடி இத்தாலி பிரதமர் உடன் செல்ஃபி எடுத்துள்ளார். இதனை எக்ஸ் தளத்தில் பகிர்ந்த ஜியார்ஜியா, 'காப்28-ல் நல்ல நண்பர்கள்' எனக் குறிப்பிட்டிருந்தார். இருவரின் பெயரையும் இணைத்து 'மெலோடி' என்கிற ஹேஷ்டேக்கும் பதிவிட்டிருந்தார்.

இந்தப் புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த நிலையில், ஜியார்ஜியாவின் பதிவைப் பகிர்ந்த மோடி, "நண்பர்களைச் சந்திப்பது எப்போதும் மகிழ்வளிக்கக் கூடியது" எனப் பதிவிட்டுள்ளார். ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைமையில் நடைபெறும் பருவநிலை பாதுகாப்பு நாடுகள் கூட்டமைப்பின் மாநாடு(காப்28) துபையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மோடி, இத்தாலி பிரதமர் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து வெள்ளிக்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

# டி-20 தொடரை கைப்பற்றியது இந்திய ரசிகர்களுக்கு மகிழ்ச்சி
## ருதுராஜ் கெய்க்வாட் பேட்டி

**மும்பை, டிச. 03-**

உலகக் கோப்பைத் தொடரின் இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு கிடைத்துள்ள டி20 தொடர் வெற்றி ரசிகர்களுக்கு சிறிது மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளதாக இந்திய அணியின் ருதுராஜ் கெய்க்வாட் தெரிவித்துள்ளார்.

**பெரும் ஏமாற்றம்...**

உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்து அதிர்ச்சியளித்தது. இந்திய அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றும் எனக் காத்திருந்த ரசிகர்களுக்கு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வி பெரும் ஏமாற்றமாக அமைந்தது. உலகக் கோப்பைத் தொடர் முடிவடைந்த சில நாள்களிலேயே இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர் தொடங்கியது. இந்தத் தொடரை 3-1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது.

**சிறிது மகிழ்ச்சி...**

இந்த நிலையில், உலகக் கோப்பைத் தொடரின் இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு கிடைத்துள்ள டி20 தொடர் வெற்றி ரசிகர்களுக்கு சிறிது மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளதாக ருதுராஜ் கெய்க்வாட் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிக்குப் பிறகு அவர் பேசியதாவது: உலகக் கோப்பையில் ஏற்பட்ட தோல்வி அனைவருக்கும் ஏமாற்றமளித்த நிலையில், இந்த டி20 தொடர் வெற்றி அனைவருக்கும் சிறிது மகிழ்ச்சியை கொடுக்கும் என நினைக்கிறேன்.

**ஆலோசித்தோம்...**

ஆட்டத்தை ரசித்து விளையாட வேண்டியது முக்கியம் என நினைக்கிறேன். அனைவரும் ஒவ்வொரு படிநிலையில் பொறுப்புகளை ஏற்று விளையாடுகின்றனர். டி20 தொடரில் வெற்றி பெற்றது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆனால், இந்த டி20 தொடரில் மீதம் ஒரு போட்டி இருக்கிறது. அச்சமின்றி விளையாட வேண்டும் என்பது குறித்து ஆலோசித்தோம். உலகக் கோப்பை அணியில் இருந்த 2-3 வீரர்கள் அணியில் இருந்தது அணிக்கு பலம் சேர்த்தது.

**கற்றுக்கொண்டேன்...**

அனைவரும் உள்ளூர் போட்டிகளில் விளையாடியுள்ள வீரர்கள் என்பதால் அணியில் நேர்மறையான ஆற்றல் இருந்தது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியிலிருந்து நிறைய கற்றுக் கொண்டுள்ளேன். ஆட்டத்தின் போக்கை கணிப்பதிலும், ஆட்டத்தைப் புரிந்து கொள்வதிலும் மகேந்திர சிங் தோனி கவனம் செலுத்தி அணியை சிறப்பாக வழிநடத்துவார்.

நமது எண்ணங்களை சிதறவிடக் கூடாது என அவர் கூறுவார். தொடக்க ஆட்டக்காரராக சிறப்பான பங்களிப்பை வழங்க உனக்கு போதுமான நேரமிருக்கிறது எனவும் கூறுவார் என்றார்.

## இந்திய அணி புதிய சாதனை

டி-20 போட்டியில் ஆஸ்திரேலிய அணியை வீழ்த்திய தன் மூலம் சர்வதேச டி20 போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்ற அணியாக இந்திய அணி சாதனை படைத்துள்ளது. சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக டிச.1-ல் நடைபெற்ற 4-வது டி20 போட்டியில் இந்திய அணி இந்த சாதனையை நிகழ்த்தியது.

தொடரை 3-1 என்ற கணக்கில் வென்றது இந்திய அணி. இது சர்வதேச டி20 போட்டிகளில் இந்திய அணி பெறும் 136வது வெற்றியாகும். இந்திய அணி 136 போட்டிகளில் வெற்றி அடைந்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் 226 ஆட்டங்களில் 135 வெற்றிகளைப் பெற்றுள்ள பாகிஸ்தானை தாண்டி இந்தியா முதலிடம் பெற்றுள்ளது.

## ஐ.பி.எல். குறித்து ரிங்கு சிங்

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரை இந்திய அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தத் தொடரில் இந்திய அணியின் இளம் வீரர்களில் ஒருவரான ரிங்கு சிங் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அழுத்தமான சூழலில் சிறப்பாக விளையாடி இந்திய அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவுகிறார் ரிங்கு சிங். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரில் 22* (14), 31* (9), 46 (29) ரன்கள் குவித்து அதிரடியில் மிரட்டினார் ரிங்கு சிங்.

இந்த நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அழுத்தமான சூழலில் சிறப்பாக செயல்பட ஐபிஎல் தொடரும், கடுமையான பயிற்சியும் உதவியதாக ரிங்கு சிங் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: ஐபிஎல் போட்டிகளில் நான் நீண்ட காலமாக விளையாடி வருகிறேன். கடந்த 5-6 ஆண்டுகளாக ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வருகிறேன். ஐபிஎல் போட்டிகளில் விளையாடியது எனக்கு நம்பிக்கையளித்தது. நான் என்னை அமைதியாக வைத்துக்கொள்ள முயற்சி செய்வேன் என்றார்.

## சாதனை படைத்த வங்கதேசம்

முதல் டெஸ்ட் போட்டியின் 4-ம் நாளான வெள்ளிக்கிழமை முடிவில் டேரில் மிட்செல் 44, இஷ் சோதி 7 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சனிக்கிழமையான நேற்று 181 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது நியூசி. வங்கதேச தரப்பில் தைஜுல் இஸ்லாம் 6 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார். ஷோரிபுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் மிராஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டும் நயீம் ஹசன் 2 விக்கெட்டும் எடுத்தனர்.

நியூசி.க்கு எதிராக இது வங்க தேசத்தின் 2வது டெஸ்ட் வெற்றி. தங்கள் சொந்த மண்ணில் முதன்முறையாக நியூசிலாந்தை வீழ்த்தி வரலாற்று சாதனையை பதிவு செய்துள்ளது. இதன்மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப் ப்ட்டியலில் 2வது இடத்துக்கு வங்கதேசம் முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற
# செஸ் வீராங்கனை வைஷாலிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச. 03-**

கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செஸ் வீராங்கனை வைஷாலிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரபல தமிழக செஸ் வீரரும், கிராண்ட் மாஸ்டருமான பிரக்ஞானந்தாவின் சகோதரியான வைஷாலி, இந்தியாவின் 84வது கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை பெற்றுள்ளார். இதன் மூலம் இவர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெறும் முதல் தமிழக வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார். அவருக்கு பல்வேறு தரப்பில் இருந்து வாழ்த்துகள் குவிந்துவருகின்றன.

இந்த நிலையில், வைஷாலிக்கு வாழ்த்து தெரிவித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது; "தமிழ்நாட்டின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டராக பட்டம் சூடிய வைஷாலிக்கு வாழ்த்துகள். செஸ் வீராங்கனை வைஷாலியின் சாதனைகள் குறித்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். வைஷாலியின் வெற்றிப்பயணம், செஸ் ஆர்வலர்களுக்கு உத்வேகம் அளிக்கும். கிராண்ட்மாஸ்டர் உடன்பிறப்புகளாக நீங்களும் உங்கள் சகோதரர் பிரக்ஞானந்தாவும் வரலாறு படைத்துள்ளீர்கள்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அணையில் அனுமதியின்றி நீர் திறப்பு:
# ஆந்திரா - தெலுங்கானா மாநில போலீசார் இடையே மோதல்

**ஐதராபாத், டிச. 03-**

நாகார்ஜூனா சாகர் அணையில் அனுமதியின்றி தண்ணீர் திறந்ததாக ஆந்திரா போலீசார் மற்றும் தெலுங்கானா போலீசார் இடையே மோதல் ஏற்பட்டது. இதை அடுத்து அணையின் பாதுகாப்பு மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர - தெலுங்கான மாநிலங்களுக்கு இடையே கிருஷ்ணா நதி பாய்கிறது. அந்த நதிக்கு குறுக்கில் நாகார்ஜூனா சாகர் அணை அமைந்துள்ளது. அணையின் பாதுகாப்புகள் அனைத்தும் தெலுங்கானாவின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இந்நிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன் அதிகாலை 2 மணியளவில் கிட்டத்தட்ட 700 ஆந்திர போலீசார் அணைக்குள் நுழைந்து வலது கால்வாயை திறக்க முயன்றனர். இதை தடுக்க தெலுங்கானா போலீசார் முயன்றனர். இதனால் இரு தரப்பிற்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றி ஆந்திர மாநில நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அம்பதி ராம்பாபு தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் "நாகார்ஜூனாசாகர் வலது கால்வாயில் இருந்து குடிநீர் தேவைக்காக கிருஷ்ணா நதியில் தண்ணீர் திறந்து விடுகிறோம்" என தெரிவித்துள்ளது. அணை பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த தெலுங்கானா போலீசாருடன், ஆந்திர போலீசார் மோதலில் ஈடுபட்டனர். பின்னர், அணை பாதுகாப்பு நிர்வாகத்தை கைப்பற்றிய ஆந்திர போலீசார், அணையின் கேட் 5 மற்றும் 7ல் உள்ள நீரை மணிக்கு சுமார் 5,000 கன அடி திறந்துவிட்டனர் என தெலுங்கானா தலைமைச் செயலாளர் சாந்தி குமாரி குற்றம் சாட்டினார்.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியதால் மத்திய அரசு ரிசர்வ் போலீஸ் படை சம்பவ இடத்திற்கு வந்தனர். மேலும் மோதலைத் தவிர்க்க, தெலுங்கானா மற்றும் ஆந்திரா மாநில உள்துறை செயலாளர்களுடன் வீடியோ கால் மூலம் பேசிய மத்திய உள்துறை செயலாளர் அஜய் பல்லா இரு தரப்பையும் சமாதானப்படுத்தினார். இதையடுத்து, அணையை மத்திய ரிசர்வ் போலீஸ் படை (CRPF) மேற்பார்வையிடும். மேலும், ஒப்பந்தத்தின்படி இரு தரப்புக்கும் தண்ணீர் வருவதைக் கண்காணிக்கும் என்று கூறினார். இந்த திட்டத்திற்கு இரு மாநிலங்களும் சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக ஆந்திரா போலீசார் மீது தெலுங்கானா நல்கொண்டா நகரில் போலீசார் 2 வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### அடுத்த 20 ஆண்டுகளில்
# ரூ. 4.16 லட்சம் கோடியை எட்டும் ஐ.பி.எல். ஒளிபரப்பு உரிம மதிப்பு

**மும்பை, டிச. 03-**

ஐ.பி.எல். போட்டிகளுக்கான ஊடக உரிம மதிப்பு அடுத்த 20 ஆண்டுகளில் 50 பில்லியன் டாலராக (ரூ.4.15 லட்சம் கோடி) உயரும் என்று எதிர்பார்ப்பதாக ஐ.பி.எல். தலைவர் அருண் துமால் தெரிவித்துள்ளார்.



**கடும் போட்டி...**

இந்தியாவில் ஆண்டுக்கு ஒருமுறை ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ரசிகர்களிடையே ஐ.பி.எல். மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், மிகப் பெரும் விளம்பர வருவாயை ஈட்டக்கூடியதாக அது உள்ளது. இதனால், ஐ.பி.எல். போட்டிகளை ஒளிபரப்பு செய்வதற்கான உரிமம் பெறுவதில் ஊடகங்களிடையே கடும் போட்டி நிலவுகிறது.

**2-ம் இடத்தில்...**

இந்நிலையில், 2043-ம் ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளுக்கான ஊடக உரிம மதிப்பு 50 பில்லியன் டாலரைத் தொடும் என்று எதிர்பார்ப்பதாக அருண் துமால் குறிப்பிட்டுள்ளார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐ.பி.எல். உரிம மதிப்பு 6.2 பில்லியன் டாலரை (ரூ.51 ஆயிரம் கோடி) தொடும் என்று மதிப்பிடப்படுகிறது.

உலக அளவில், ஊடக உரிம மதிப்பின் அடிப்படையில் ஐ.பி.எல். 2-ம் இடத்தில் உள்ளது. முதல் இடத்தில் நேஷனல் புட்பால் லீக் (என் எஃப்எல்) உள்ளது. அதன் ஊடக உரிம மதிப்பு 110 பில்லியன் டாலர் (ரூ.9.13 லட்சம் கோடி) ஆகும்.

### புயல் காரணமாக
# அண்ணா பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைப்பு

**சென்னை, டிச. 03-**

புயல் எதிரொலி காரணமாக அண்ணா பல்கலைக்கழக தேர்வுகளை ஒத்திவைத்துள்ளது.

வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி டிசம்பர் 5ம் தேதி முற்பகலில் கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் நேற்று வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில், மிக்ஜம் புயல் டிச.5ம் தேதி முற்பகலில் கரையை கடக்கும் என்றும், தற்பொழுது சென்னையிலிருந்து 420 கிலோ மீட்டர் தொலைவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, அண்ணா பல்கலைக்கழகத்தில் செமஸ்டர் தேர்வுகள் நடைபெற்று வருகிறது. கன மழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், மாணவர்களின் பாதுகாப்புக் கருதி சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

### வெள்ளத்தில் மாயமான
# 77 பேரும் இறந்திருக்கக்கூடும்: சிக்கிம் அரசு அதிர்ச்சி தகவல்

**கேங்க்டாக், டிச. 03-**

வடகிழக்கு மாநிலமான சிக்கிமில், கடந்த அக்டோபர் 4-ம் தேதி, லோனாக் ஏரிப் பகுதியில் மேகவெடிப்பின் காரணமாக கொட்டித்தீர்த்த அதீத கனமழையால், தீஸ்தா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பெரு வெள்ளத்தில் சிக்கி 46 பேர் உயிரிழந்தனர். மேலும், வெள்ளத்தில் 77 பேர் அடித்துச் செல்லப்பட்டனர். அதில் 2 பேரின் உடல்கள், அடையாளம் தெரியாத நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 77 பேரை தேடும் பணி கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வந்த நிலையில், அவர்களின் கதி என்ன என்பது குறித்த விவரம் இதுவரை தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 2 மாதங்களைக் கடந்துவிட்ட நிலையில், மாயமானவர்கள் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை எனவும், அவர்கள் அனைவரும் இறந்திருக்கக்கூடும் எனவும் சிக்கிம் தலைமைச் செயலாளர் விபி பதாக் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

இதனையடுத்து, அவர்களின் குடும்பத்துக்கு, இயற்கை பேரிடர்களால் உயிரிழப்போருக்கு வழங்கப்படும் நிவாரணத்தின் கீழ், மாநில அரசு நிவாரணத் தொகையாக ரூ.4 லட்சமும், பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2 லட்சமும் நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தில் காணாமல் போன இந்திய மாணவன் சடலமாக மீட்பு

**லண்டன், டிச. 03-**

இங்கிலாந்தில் காணாமல் போன இந்திய மாணவன் தேம்ஸ் நதியில் சடலமாக மீட்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த மித்குமார் படேல் (வயது 23) மேற்படிப்புக்காக கடந்த செப்டம்பர் 19ம் தேதி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள தனது உறவினர் வீட்டிற்கு வந்துள்ளார். அந்த மாணவனுக்கு ஷெபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு இடம் கிடைத்தது. மேலும், அமேசானில் பகுதி நேர வேலையும் கிடைத்திருந்தது. கடந்த நவம்பர் 20 ஆம் தேதி மித்குமார் படேல் ஷெபீல்டுக்கு செல்ல இருந்தார்.

இந்நிலையில், நவம்பர் 17-ம் தேதி வழக்கம்போல நடைப்பயிற்சிக்காக சென்ற மித்குமார் வீட்டுக்கு திரும்பாத நிலையில் கவலை அடைந்த உறவினர், போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதை தொடர்ந்து , நவம்பர் 21-ம் தேதி லண்டனில் உள்ள தேம்ஸ் நதியில் மித்குமார் படேலின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. உடலைக் கைப்பற்றிய போலீசார், மரணம் சந்தேகத்துக்கு உரியதாக இல்லை என தெரிவித்தனர். இதனையடுத்து, மித்குமார் படேலின் குடும்பத்துக்கு நிதி உதவி அளிக்க அவரது உறவினரான பார்த் படேல், கோ பண்ட் மீ (Go Fund Me) என்ற இணையதளத்தின் மூலம் நிதி உதவி கோரியுள்ளார்.

அதில் மித்குமார் படேல் குறித்து வெளியிட்டுள்ள பதிவில், "மித்குமார் படேல் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். கிராமத்தில் வசித்து வந்தவர். கடந்த நவம்பர் 17, 2023 முதல் அவர் காணாமல் போன நிலையில், நவம்பர் 21-ம் தேதி அவரின் உடல் தேம்ஸ் நதியில் மீட்கப்பட்டது. இது எங்கள் அனைவருக்கும் வருத்தமாக இருந்தது. அவரது குடும்பத்துக்கு உதவுவதற்காக நிதி திரட்டவும் உடலை இந்தியாவிற்கு அனுப்பவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் திரட்டிய சுமார் ரூ.4 லட்சத்திற்கு மேலான உதவி தொகையை மித்குமாரின் குடும்பத்திற்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும் என பார்த் தெரிவித்தார்.

# சிக்கலில் மைக் டைசன்

பிரபல முன்னாள் குத்துச்சண்டை சாம்பியன் மைக் டைசன், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் விமானத்தில் பயணம் செய்தபோது தன்னுடன் பயணித்த சக பயணியை அடித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. சான் பிரான்சிஸ்கோவில் இருந்து புறப்பட்ட ஜெட்புளூ விமானத்தில் மைக் டைசனுக்கு பின் இருக்கையில் அமர்ந்திருந்த மெல்வின் டவுன்சென்ட் என்ற பயணி, மைக் டைசனிடம் தொடர்ந்து பேச்சு கொடுத்தார். டைசனின் காதுக்கு அருகே சென்று பேசி நச்சரித்துக் கொண்டே இருந்தார். இதனால் பொறுமை இழந்த மைக் டைசன், அந்த நபரை பயங்கரமாக தாக்கினார். மாறி மாறி குத்துவிட்டதில் அந்த நபருக்கு காயம் ஏற்பட்டது. இந்த சம்பவம் நடந்து ஒரு வருடத்தை தாண்டிய நிலையில், டைசனிடம் குத்து வாங்கிய மெல்வின் டவுன்சென்ட், நஷ்ட ஈடு கேட்டுள்ளார். டைசன் தாக்கியதால் ஏற்பட்ட காயங்களுக்கு அதிக மருத்துவச் செலவுகளை செய்ததாக கூறி, 3.50 லட்சம் பவுண்டுகள் இழப்பீடாக வழங்க வேண்டும் என கூறியிருக்கிறார். இதுதொடர்பாக டவுன்சென்டின் வழக்கறிஞர்கள் டைசனின் வழக்கறிஞர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில், நஷ்ட ஈடு தொடர்பான உடன்பாடு எட்டப்படாவிட்டால் வழக்கு தொடரப்போவதாகவும் மிரட்டியுள்ளனர்.

# புதுவையில் கல்லூரிகளுக்கும் நாளை விடுமுறை அறிவிப்பு

**புதுவை, டிச. 03-**


புயல் எச்சரிக்கை காரணமாக புதுவையில் நாளை பள்ளிகளுக்கு ஏற்கனவே விடுமுறை அளிக்கப்பட்டிருந்த நிலையில், கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவை, காரைக்கால், ஏனாம் மாவட்ட பள்ளிகளுக்கு டிச. 4 ஆம் தேதி விடுமுறை அளிக்கப்படும் என்று வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தது புதுச்சேரி அரசு. வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் சின்னம் இன்று புயலாக மாறும் என்றும் அது திங்கள்கிழமை இரவு அல்லது செவ்வாயன்று காலை தெற்கு ஆந்திரம் - வடதமிழகத்திற்கு இடையே கரையை கடக்கும் என்றும் கூறப்படுகிறது.

இதன் காரணமாக, நாளை (4-ம் தேதி) புதுவைக்கு கன மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளதால் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டி2ருந்தது. ஆனால், முன்னெச்சரிக்கையாக கல்லூரிகளுக்கும் நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



சென்னையில் நேற்று, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியின் 91-வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். அருகில் கி.வீரமணியின் துணைவியார் வீ.மோகனா அம்மையார் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



வங்கக்கடல் பகுதியில் புயல் சின்னம் உருவாக உள்ளதால் கனமழை முதல் அதிகனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேற்று மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, கூடுதல் தலைமைச்செயலாளர் எஸ்.கே.பிரபாகர், செயலாளர் வே.ராஜாராமன் ஆகியோர் உடனிருந்தனர்.



மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி வார்டு 56-ல் உள்ள ஆரப்பாளையம் இல்லத்து பிள்ளைமார் சங்கம் வைர விழா புட்டு திருக்கண் மண்டபத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் மகளிருக்கு வளையல் மற்றும் சீர்வரிசை பொருட்களை நேற்று, அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வழங்கினார். அருகில் மேயர் உள்ளார்.



சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள 110/11 கி.வோ. வள்ளுவர் கோட்டம் துணை மின் நிலையத்தில் உள்ள 16 எம்.வி.ஏ. உயரழுத்த மின் மாற்றியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுது நீக்கும் பணியினை நேற்று, அமைச்சர் தங்கம்தென்னரசு மேற்பார்வையிட்டு, பழுது நீக்கும் பணியினை துரிதமாக முடித்து மின் மாற்றியினை விரைவாக இயக்கத்திற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அருகில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர், மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர் இரா.மணிவண்ணன் ஆகியோர் உள்ளனர்.



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா.ஒத்தக்கடை ஊராட்சி ஒன்றியப்பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று சிறப்பு முகாமை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு காப்பீட்டுக்கான அடையாள அட்டையை வழங்கினார். அருகில் மாவட்ட கலெக்டர் சங்கீதா, திட்டக்குழு தலைவர் சூரியகலா ஆகியோர் உள்ளனர்.



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உடல்நிலையில் திடீர் பின்னடைவு? விஜயகாந்துக்கு தீவிர சிகிச்சை

சென்னை, டிச. 03- விஜயகாந்த் உடல்நிலையில் திடீர் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் சினிமாவின் மூத்த நடிகர்களில் ஒருவரும், தேமுதிக கட்சியின் தலைவருமான விஜயகாந்த் உடல் நலக் குறைவு காரணமாக சில நாட்களுக்கு முன்பு சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். தற்போது அவருடைய உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக மருத்துவமனைக்கு சென்று அவரது குடும்பத்தாரிடம் நடிகர் சங்கத்தலைவர் நாசர், பெப்சி சங்கத்தலைவர் ஆர்கே செல்வமணி ஆகியோர் விசாரித்தனர். தொடர்ந்து தீவிர சிகிச்சையில் உள்ள விஜயகாந்தின் உடல்நிலை சீராக வேண்டுமென அவரது ரசிகர்களும், கட்சியினரும் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

### புயல் எச்சரிக்கை எதிரொலி:

# தயார் நிலையில் இருக்க மருத்துவ பணியாளர்களுக்கு அரசு உத்தரவு

சென்னை, டிச. 03- புயல் எச்சரிக்கை காரணமாக மருத்துவ பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று தமிழக சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. மேலும், தேவையான மருத்துவ பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு-வட மேற்கு திசையில் நகர்ந்து நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும். இந்த புயலுக்கு 'மிக்ஜம்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயல் வரும் 4-ம் தேதி வட தமிழக கடலோர பகுதிக்கு நகர்ந்து 5-ம் தேதி நெல்லூர்-மசூலிப்பட்டினம் இடையே கரையை கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கும் இன்று மிக கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புயல் எச்சரிக்கை காரணமாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. மேலும் தேவையான மருத்துவ பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும். நிவாரண மையங்களில் மருத்துவ குழுக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். தேவையான அளவு கிருமி நாசினி தயார் நிலையில் இருக்க வேண்டும். நிவாரண முகாம்களில் உள்ளவர்களுக்கு சுத்தமான குடிநீர், சுகாதாரமான உணவு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அனைத்து மாவட்ட சுகாதார அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.

### மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்தில்

# லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய 13 மணி நேர சோதனை நிறைவு

மதுரை, டிச. 03- திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை டாக்டர் சுரேஷ் பாபு. இவர் திண்டுக்கல்லில் தனியாக மருத்துவமனை நடத்தி வருகிறார். இவர் மீது கடந்த 2018ம் ஆண்டு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த வழக்கு தற்போது நிறைவடைந்துள்ளது.

இதனிடையே, கடந்த 3 மாதங்களுக்கு முன் மதுரை அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரி டாக்டர் சுரேஷ்பாபுவின் செல்போனில் தொடர்புகொண்டு சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பாக விசாரணைக்கு மதுரை அலுவலகத்திற்கு வரும்படி கோரியுள்ளார். இதனால், அதிர்ச்சியடைந்த டாக்டர் சுரேஷ்பாபு மதுரை அமலாக்கத்துறை அலுவலகம் சென்றுள்ளார். அங்கு அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரியை சந்தித்தார். அப்போது, சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை அமலாக்கத்துறை வசம் வந்திருப்பதாக கூறிய அன்கிட் வழக்கில் இருந்து விடுவிக்க ரூ. 3 கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்கவேண்டுமென கூறியுள்ளார்.

இதை கேட்டு அதிர்ச்சியடைந்த டாக்டர் சுரேஷ் பாபு தன்னால் 3 கோடி ரூபாய் தர இயலாது என்று கூறியுள்ளார். இறுதியில், 51 லட்ச ரூபாய் கொடுக்கும்படி அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரி லஞ்சம் கேட்டுள்ளார். அதன்படி கடந்த நவம்பர் 1ம் தேதி சுரேஷ் பாபு முதற்கட்டமாக 20 லட்ச ரூபாய் லட்சத்தை அன்கிட் திவாரியிடம் கொடுத்துள்ளார். இதனை தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன் சுரேஷ் பாபுவை மீண்டும் தொடர்புகொண்ட அன்கிட் திவாரி மீதமுள்ள 31 லட்ச ரூபாயை கேட்டு நெருக்கடி கொடுத்துள்ளார். இதனால், இந்த விவகாரத்திற்கு ஒரு முடிவு கட்ட திட்டமிட்ட டாக்டர் சுரேஷ்பாபு, திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த லஞ்ச ஒழிப்பு போலீசார், சுரேஷ்பாபுவிடம் ரசாயன பொடி தடவிய ரூபாய் நோட்டுகளை கொடுத்து அதை அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரியிடம் லஞ்சமாக கொடுக்கும்படி கூறியுள்ளனர். அதன்படி, நேற்று முன்தினம் திண்டுக்கல் அருகே மதுரை நான்கு வழிச்சாலையில் தோமையார்புரம் அருகே சுரேஷ்பாபுவிடமிருந்து ரூ.20 லட்சம் லஞ்சப்பணத்தை அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரி பெற்றார். அப்போது, அங்கு காரில் பின் தொடர்ந்து வந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் அன்கிட் திவாரியை பிடிக்க முற்பட்டனர். ஆனால், அன்கிட் தனது காரில் தப்பிச்சென்றார். அவரை பின் தொடர்ந்து சென்ற லஞ்ச ஒழிப்பு போலீசார் 25 கிலோ மீட்டர் விரட்டி சென்று பிடித்தனர்.

பின்னர், அமலாக்கத்துறை அதிகாரி அன்கிட் திவாரியை திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் ஒரு பகுதியாக மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு சென்ற திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசார் அங்கும் சோதனை நடத்தினர். அன்று இரவு முழுவதும் இந்த சோதனை நீடித்தது. இந்நிலையில், மதுரை அமலாக்கத்துறை துணை மண்டல அலுவலகத்தில் 13 மணி நேரமாக நடைபெற்ற லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நேற்று காலை நிறைவடைந்தது. இந்த சோதனையின்போது பல்வேறு ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். அதேவேளை, கைது செய்யப்பட்ட அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரை வரும் 15ம் தேதி வரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.